Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


மலர் - 20 இதழ் - 3 மார்ச் - 2007



கிறிஸ்துவின் சபை
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
04257 - 230030 Cell : 98427 - 30382, 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. சுயேட்சை ஊழியர்களும் சபைகளும் ........ 10
3. பெண்கள் பகுதி ........ 13
4. வாலிபர் பகுதி ........ 16
5. சிறுவர் பகுதி ........ 20
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 22
7. சபைக்கு முன்மாதிரி ஒன்று உள்ளதா? ........ 26
8. அந்நிய பாஷைகளைக் கற்றுக்கொள்வோம் ........ 28

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 20 MARCH - 2007 Issue - 3

ஆசிரியர் உரை

## "முதல் பிரசங்கத்திலிருந்து....."

வார்த்தை என்பது எண்ணங்களின் வெளிப்பாடு. ஆனால், பேச்சு என்பது, வார்த்தைகளைச் சேர்த்தும், கோர்த்தும் நாம் நினைப்பதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் ஓர் முறை. பேச்சு என்பது பெரும்பாலும் ஜென்மீக காரியங்கள் சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். பிரசங்கம் என்பதும் ஒரு வகையான பேச்சுதான். ஆனால், அது முழுக்க முழுக்க ஆன்மீக காரியங்கள் பற்றியது. பரலோக தேவனின் சார்பாக மனிதர்களிடத்தில் பேசுவது. இப்படி தேவனுக்காக மனிதனிடம் பேசுவது ஆதிகாலந்தொட்டு நடந்து வந்திருக்கும் ஒரு செயலே. முதல் மனிதனாகிய ஆதாமுக்கு ஏழாந் தலைமுறையானவனும், தேவனோடு சஞ்சரித்தவனுமான ஏனோக்கு (ஆதி. 5:24). அவன் வாழ்ந்த காலத்தில் தேவனுக்காகப் பேசியுள்ளான் என்று வேத வசனத்தில் பார்க்கிறோம் (யூதா 14,15). ஜலப்பிரளயத்திலிருந்து குடும்பத்தோடு காக்கப்பட்ட நோவாவைக் குறித்துப் பேதுரு அப்போஸ் தலன், "நீதியைப் பிரசங்கித்தவன்" என்று குறிப்பிடுகிறார். (IIபேதுரு 2:5). மீன் வயிற்றிலிருந்து மீண்டெழுந்த யோனா ஒரு பிரசங்கியாக (யோனா 1:2) இருந்ததோடு, ஒரு சந்தர்ப்பத்தில் அதிகப் பிரசங்கியாகவும் (யோனா 4:1-3) இருந்துள்ளான்.

பழைய ஏற்பாட்டில் மாத்திரமல்ல, புதிய ஏற்பாட்டிலும் பிரசங்கிகள் இருக்கிறார்கள். நம்முடைய இரட்சகர் இயேசு ஓர் ஒப்பற்ற உன்னதப் பிரசங்கி. ஜனங்களின் நாடித்துடிப்பை அறிந்து பேசுவதில் வல்லவர் (மத். 13:34). பிரசங்கங்களுக்கு வலு சேர்க்க உதாரணங்களைப் புகுத்தியவரும் அவரே (மாற் 4:33) அவரது பிரசங்கத்தில் எளிமையும், கருத்தாழமும், பக்தியுணர்வும்

ஒருங்கே அமைந்து ஒன்றுக்கொன்று போட்டி போடும் (மத். 5:13-16). இயேசு ஆண்டவருக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் முகதாட்சண்யம் பாராத ஒரு பிரசங்கி (மத். 3:7). இன்னும், பெந்தெகொஸ்தே நாள் புகழ் பேதுரு (அப். 2) மார்ஸ் மேடை புகழ் பவுல் (அப். 17) போன்ற சத்தியப் பிரசங்கிகளும், யோவான், பர்னபா, தீமோத்தேயு, தீத்து போன்ற முன்னோடிப் பிரசங்கிகளும் இருக்கிறார்கள்.

இந்தப் பிரசங்கங்கள் எல்லாம் தேவனிடமிருந்து பிரிந்த மனிதன் மீண்டும் அவரோடு ஒப்புரவாகும்படியாகவே எல்லாக் காலத்திலும் செய்யப்பட்டு வந்திருக்கிறது, வருகிறது. பிரசங்கம் என்பது தேவ திட்டத்தின் படியானது. தேவனுக்குப் பிரியமானது. **எப்படியெனில், தேவ ஞானத்துக் கேற்றபடி, உலகமானது சுய ஞானத்தினாலே தேவனை அறியாதிருக் கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று** (1 கொரி 1:21). **பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?** (ரோம 10:14) என்று பவுலைக் கொண்டு ஆவியானவர் கேட்கிறார்.

சரி, இப்படி தேவத் திட்டத்தின்படியாக இருந்து, பழைய ஏற்பாட்டிலிருந்து துவங்கி, ஏராளமான பிரசங்கிகள் இருக்கும் போது, முதல் பிரசங்கம் என்று மாத்திரம் குறிப்பிட்டால் அது யாருடையது என்ற கேள்வி தானாக வரும். கிறிஸ்துவின் சிலுவைக்குப்பின் வாழும் நாம் ஒவ்வொரு வரும் இரட்சிக்கப்படுவதற்கும், கிறிஸ்துவின் உபதேசப்படி வாழ்வதற்கும் பழைய ஏற்பாட்டுப் பிரசங்கங்களை விட, புதிய ஏற்பாட்டுப் பிரசங்கங்கள் அதிக நன்மை பயக்குமாதலால், நாம் புதிய ஏற்பாட்டுப் பிரசங்கங்களில் ஒன்றைத் தான் பார்க்கப்போகிறோம். அது புதிய ஏற்பாட்டில், இயேசு ஆண்டவருக்கு அடுத்தபடியாக, எல்லோராலும் அறியப்பட்டிருக்கும் பவுல் அப்போஸ்தலனின் முதல் பிரசங்கமே. முதல் பிரசங்கம் என்று நான் கூறும் போது, நமக்கு ஆவியானவரால் வேதாகமத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டி ருக்கும் முதல் பிரசங்கத்தையே நான் குறிப்பிடுகிறேன்.

இப்பிரசங்கம், பவுலடியார் மேற்கொண்ட மூன்று நற்செய்திப் பயணங்களில், முதல் பயணத்தின் ஒரு கட்டத்தில் செய்யப்பட்ட பிரசங்கம். இது, அப்போஸ்தலர் 13-ம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. அந்தி யோகியா பட்டணத்தில் விசுவாசிகள் உபவாசித்து ஆராதனை செய்து கொண்டிருக்கும்போது, பவுலும், பர்னபாவும் ஆவியானவரால் அழைக்கப் பட்டு, விசுவாசிகளால் அனுப்பப்பட்டு ஊழியத்தை ஆரம்பித்தனர் (அப். 13:1-3). பயணம் செலூக்கியா வழியாக ஆரம்பமாகிறது. சாலமி பட்டணம் வந்தபோது, அங்கே அவர்கள் தேவ வசனத்தைப் பிரசங்கித்துள்ளார்கள். ஆனால், என்ன பிரசங்கித்தார்கள் என்று நமக்கு எழுதிக் கொடுக்கப் படவில்லை. அங்கிருந்து பாப்போ பட்டணம் வந்து, பர்யேசு, எலிமா என்னும் பெயரைக் கொண்ட மாயவித்தைக்காரனைத் தோலுரித்துக் காட்டிவிட்டு, பெர்கே வழியாக பிசீதியாவிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்தனர்.

அங்கே பவுல், ஓய்வு நாளில், பழைய பிரமாணத்தின்படி யூதர்கள் கூடி வந்த ஜெப ஆலயத்திற்குச் சென்று பர்னபாவோடு சேர்ந்து உட்கார்ந்தான். அப்பொழுது, அவர்களின் வருகையின் நோக்கத்தை மோப்பம் பிடித்த ஜெப ஆலயத் தலைவர்கள், **புத்தி சொல்ல விரும்பினால் சொல்லுங்கள் என்று கேட்டார்கள்** (அப். 13:14,15). இது பவுலுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந்தது. விடுவாரா? யூதர்கள் எப்பொழுதும் வாயைப் பிளந்து கொண்டு கேட்கும் அவர்கள் முன்னோர்களின் சரித்திரத்தை எகிப்தில் அடிமைகளாயிருந்ததிலிருந்து ஆரம்பித்து, இயேசு வாக்குத்தத்தத்தின் படியானவர் என்று கூறி, பாவமன்னிப்புக்கு அவரே கதி என்று உணர்த்தி, அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள தடுமாறுவார்கள் என்பதை உணர்ந்து, தாங்கள் பெரிதாக மதிக்கும் மோசேயைக் காட்டிலும், இயேசு பெரியவர் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளும்படி, "மோசேயின் நியாயப் பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான் களாக்கப்படக் கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக் கக்கடவது". என்று முடிக்கிறார். (அப். 13:39). இப்படிச் சொல்லுவதை அவர்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள் என்பதை தனக்குள்ளே ஊகித்து, "அசட்டைக்காரரே, பாருங்கள், பிரமித்து அழிந்து போங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்க மாட்டீர்களென்று சொல்லியிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக் கையாயிருங்கள் என்றான்" (அப். 13:41).

இப்பிரசங்கத்தைக் கவனித்தால், இதில் எல்லாமே அடங்கியிருக்கிறது. காதுக்கினியவைகளும் இருந்தது. உண்மையின் நிரூபணம் இருந்தது. உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கண்டிப்பு இருந்தது. அசட்டை பண்ணினால் தப்பிக்க முடியாது என்ற எச்சரிப்பு இருந்தது. ஒருவேளை, முதல் பிரசங்கத்திலிருந்து என்று நான் தலைப்பிட்டிருந்தாலும், இப்பிரசங்கத் தினூடே உள்ள காரியங்களை நாம் இப்பொழுது பார்க்காமல், இப்பிரசங்கம் தொடர்பாக நடந்தவைகளிலிருந்து சிலவற்றை நாம் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

**I. கூடிவந்தவர்களின் பிரசங்க ஆர்வம் :**

நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பவுலின் முதல் பிரசங்கம் தொடர்பாக நடந்தவைகளிலிருந்து கிடைக்கும் முதல் பாடம், கூடி வந்தவர் களின் பிரசங்க ஆர்வம்.

நாம் ஏற்கனவே பார்த்தது போல பவுலின் பிரசங்கம் செவியைக் குளிரவைக்கும் ஒரு பிரசங்கம் அல்ல. குறிப்பாக, பிரசங்கத்தை முடிக்கும் போது, "அசட்டைக்காரரே, என்று ஆரம்பித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்று முடிக்கிறார். பிரசங்கம் நடந்த இடமோ ஜெப ஆலயம். கூடிவந்தவர் களோ இயேசுவை முழு மூச்சாய் எதிர்த்து ஏற்றுக்கொள்ளாமலிருக்கும் யூதர்கள். பிரசங்கமோ, அவர்கள் நெஞ்சில் நிறைந்திருக்கும் மோசேயைக்

காட்டிலும் இயேசு பெரியவர், இயேசுவே இரட்சகர் என்பது. ஆயினும் கூட, "அவர்கள் யூதருடைய ஜெப ஆலயத்திலிருந்து புறப்படுகையில், அடுத்த ஓய்வு நாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள்" என்றுள்ளது.

இங்கே இரண்டு காரியங்களை நாம் கவனிக்கக் கடமைப் பட்டுள்ளோம். **முதலாவது,** பவுலும், பர்னபாவும் பிரசங்கித்து முடியும் வரை மாத்திரம் அவர்கள் ஜெப ஆலயத்தில் இருக்கவில்லை. மாறாக, அவர்கள், ஜெப ஆலயத்திலிருந்து புறப்படும்வரை இருந்துள்ளனர். இவர்கள் பிரசங்கத்தில் **ஆர்வமுள்ளவர்களாக** இருந்துள்ளனர் என்றே தெரிகிறது. இப்படிப்பட்ட இவர்கள், ஜெப ஆலயத்தின் கூடுகை நேரத்திற்கு சரியாக வருகிறவர்களாகவும் இருந்திருக்க வேண்டும். இங்கே நான் ஒன்றைக் கேட்கிறேன். இதை வாசிக்கும் நாம் அனைவரும் கிறிஸ்தவர்களாகவும் கிறிஸ்தவர்களென்று அழைப்பவர்களாகவும் உள்ளோம். நம்மில் எத்தனை பேர் ஆராதனை முடியும் வரை தரித்திருந்து மற்றவர்களோடு ஆவிக்குரிய காரியங்களைப் பேசிக் கூலைகிறவர்களாக உள்ளோம்? அல்லது எத்தனை பேர், ஆராதனை துவங்கும் நேரத்திற்குப் போகிறவர்களாக உள்ளோம்? சொல்லுங்கள். அவசரம், அவசரமாக, ஆராதனையின் பாதி வேளையில் போய், முடியும் வரை கலந்து கொள்ளாமல், பிரசங்கத்தின் போது எழுந்து போகிறவர்களாகவும், காணிக்கை போட்டும் போடாமலும் ஓடுகிறவர் களாகவும், இறுதி ஜெபம் ஆரம்பித்தவுடன் நைசாக நழுவுகிறவர்களாகவும் தானே உள்ளோம். அருமையானவர்களே, நாம் சரியான நேரத்திற்குப் போவதும், முடியும் வரை இருந்து மற்றவர்களைச் சந்தித்து வருவதும் நமது பக்திக்குண்டான இலட்சணங்கள் என்பது எப்பொழுதும் நம் நினைவிலிருக்க வேண்டும். ஏதோ ஏமாந்தவர்கள் தான் அப்படிச் செய்ய வேண்டு மென்று எண்ணி இறுதியில், நீங்கள் ஏமாந்து போக வேண்டாம்.

**இரண்டாவது, அடுத்த ஓய்வு நாளிலும் இந்த வசனங்களை எங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டுள்ளனர்.** இதை வாசிக்கும் போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. **சவுக்கடிப் பிரசங்கத்தை** அடுத்த வாரமும் கேட்க ஆசைப்பட்டுள்ளார்களே என்று. இன்றைக்கு நம்முடைய நாட்களில் எப்படிப்பட்ட பிரசங்கங்கள் கிறிஸ்தவர்களென்பவர்களால் விரும்பப்படுகிறது? பாவங்களைக் கண்டிக்கக் கூடாது, பிரச்சனைகளை எடுத்துப் பேசக் கூடாது, இரட்சிப்பின் வசனத்தை உணர்த்தக் கூடாது, இயேசு கட்டினது ஒரே சபைதான் என்று சொல்லக் கூடாது, நியாயத்தீர்ப்பை எடுத்துச் சொல்லி எச்சரிக்கவும் கூடாது, இவைகளைப் பேசுகிறவர் ஒரு விரோதியாகத் தானே பார்க்கப்படுகிறார். மாறாக, ஒருவனின் நித்திய வாழ்வுக்கு அவசியமான இரட்சிப்பையும், சபையையும் குறித்து வாய்திறக்காமல் இயேசு சுகமளிக் கிறார், கடனைத் தீர்த்து வைக்கிறார், கல்யாணம் செய்து வைக்கிறார், குழந்தை பாக்கியம் கொடுக்கிறார் என்றெல்லாம் பேசுபவர் களுக்கு அமோக ஆதரவு கிடைக்கிறது.

அருமையானவர்களே, எது முக்கியம்? நாம் எப்படிப்பட்ட பிரசங்கங்களை விரும்புகிறோம். ஜெப ஆலயத்திலே கூடிவந்து, இயேசுவின்

மேல் நம்பிக்கை வைக்க வேண்டிய அளவுக்கு வைக்காதவர்களே, நீதிப் பிரசங்கத்தை விரும்பியிருக்கும் போது, இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமை பலமாய் நிரூபிக்கப்பட்டதை அறிந்து வைத்திருக்கும் நாம் இரட்சிப்பு, சபை, நியாயத்தீர்ப்பு, பரலோகம் போன்ற பிரசங்கங்களில் நாட்ட மில்லாமல் இருப்பது நியாயமாகுமா? சிந்திப்போம்.

நீதி, இச்சையடக்கம், நியாயத் தீர்ப்பு ஆகியவை குறித்து இதே விதமான பிரசங்கம் ஒரு சமயம் கவர்னர் பேலிக்ஸ் முன்பாக செய்தபோது, அவன் ஒப்புக் கொடுக்காமல், "நீ போகலாம், சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்" என்று கூறி வாய்ப்பைத் தட்டிக் கழித்தான். (அப். 24:25). கண்டிப்பான பிரசங்கத்தைக் கேட்க இவனுக்கு மனமில்லை. ஆனால், அன்றைய தினம் ஜெப ஆலயத்துக்கு வந்தவர்கள் கண்டிப்பான பிரசங்கமாக இருந்தாலும் கேட்க ஆசைப்பட்டார்கள்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் பிரசங்கங்களைக் கேட்கும் காரியத்தில், பேலிக்ஸ் ஆக இல்லாமல், பிசிதியா அந்தியோகியாவின் ஜெப ஆலயத்திற்கு வந்த யூதர்களைப் போல் இருப்போம்.

**II தேவ திட்டத்தை நாம் எதிர்க்க முடியாது.**

நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பவுலின் முதல் பிரசங்கம் தொடர்பாக நடந்தவைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், தேவ திட்டத்தை நாம் எதிர்க்க முடியாது என்பது.

அடுத்த ஓய்வு நாளில் கொஞ்சங் குறையப் பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடி வந்துள்ளார்கள் இதுவும் எனக்கு ஆச்சரியமாகவே உள்ளது. ஒரு பிரசங்கம் கொஞ்சம் கண்டிப்பாகச் செய்து விட்டாலே, அடுத்த வாரம் கொஞ்சம் பேர் காணாமல் போயிருப் பார்கள். அவர்களைப் போய்ப் பார்த்து தாஜா பண்ணித்தான் அடுத்த வாரம் வர வழைக்க முடியும். ஆனால், இங்கே கதையே நேர் எதிர். மேசியா வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் யூதர்கள், அதே மேசியா வந்து விட்டார் என்று மாத்திரமல்ல, அவர் உயிர்த்தெழுந்து விட்டார் என்ற அதிர்ச்சி செய்தியையும் கேட்டுவிட்டு, அடுத்த ஓய்வு நாளிலும் பிரசங்கத் தைக் கேட்க பட்டணத்தார் அனைவரும் கூடியிருக்கிறார்கள்.

இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் வெட்கப்படுமளவுக்கு, மாற்றுக் கருத்தைக் கேட்க இவர்கள் எவ்வளவு ஆர்வமாய் இருந்திருக்கிறார்கள் என்று எண்ணிப்பாருங்கள். "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" (1தெச 5:21) என்ற வசனம் ஒருவேளை இவர் களுக்குத் தெரியாமலிருந்தாலும், எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்க ஆசையாயிருந்துள்ளார்களே இது ஆச்சரியமாக இல்லையா? பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதினார் என்று வசனம் மாத்திரம் நமக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால், அதை நம்முடைய ஆன்மீக வாழ்வில் கடைபிடிக்க வேண்டுமென்ற எண்ணமில்லையே இது எப்படி நியாய மாகும்?.

சரி, இப்படிக் கூடி வந்ததைக் கண்டு பொறாமை கொண்ட யூதர்கள் பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்து தூஷித்தார்கள் (வச 45) அதாவது, இப்படிச் செய்வதின் மூலம் பவுலின் ஊழியக் காரியங்களுக்கு முட்டுக் கட்டை போட்டு, தேவ திட்டத்தைப் பாழாக்கி விடலாம் என நினைத்தார்கள். **அப்பொழுது பவுலும், பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி; முதலாவது உங்களுக்கே தேவ வசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிற படியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்** என்றார்கள்.

பவுலுக்கு எதிரிடையாய் பேசித் தூஷித்த இந்த யூதர்களின் நினைப்பு என்ன? நம்மை விட்டால் வேறு ஆளில்லை. நாம் தான் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் நாம் இவர்களின் ஊழிய முயற்சியைத் தடுத்துவிட்டால், இவர்கள் இதோடு நிறுத்திக் கொள்வார்கள் என்று நினைத்தார்கள். ஆனால், இந்த யூதர்கள் தங்களை **நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொண்ட போது**, தேவன் இவர்களைப் புறஜாதியாரிடத்தில் அனுப்பினார் (வச. 46).

அருமையானவர்களே, தேவதிட்டத்திற்கு எதிராக, மாறாக நாம் செயல்பட முடியாது என்பதை நாம் நம் அடிமனதில் ஆழமாகப் பதித்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சமயம், புறஜாதியானாகிய கொர்நெலியு குடும்பத்தாருக்கு சுவிசேஷம் அறிவித்து ஞானஸ்நானப்படுத்தியதற்காகப் பேதுருவோடு வாக்குவாதம் செய்த யூதர்களுக்குப் பதிலளித்த போது, **தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்?** என்றான் (அப். 11:17). ஒரே பிரசங்கத்தில் 3000 பேரை இரட்சித்த பேதுரு அப்போஸ்தலனே தேவ திட்டத்தின் மகத்துவத்தை அறிந்து அப்படிக் கூறும்போது, நானும், நீங்களும் எந்த மூலை? தேவனையும், தேவ திட்டத்தையும் எதிர்க்க முடியுமா? இன்னும் உங்களுக்குத் தெளிவு வேண்டுமானால், அப்போஸ்தலர் 5:39ம் வசனத்தைக் கவனியுங்கள். ஆம், பேதுருவையும், அப்போஸ்தலர்களையும் மூர்க்கம் கொண்ட ஆலோசனைச் சங்கத்தார் கொலை செய்ய யோசனை செய்த போது, கனம் பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேல், **தேவனோடே போர் செய்கிறவர்களாகக் காணப்படாதபடிக்குப் பாருங்கள்** என்றான். தேவ திட்டத்திற்கும், சித்தத்திற்கும் எதிராக நாம் எதுவும் செய்ய முடியாது, முடியாது.

இன்னும் விளங்கவில்லையானால், கலாத்தியர் 6:7ஐ வாசியுங்கள். தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். அதாவது, நம் செய்கையின் மூலம் அவர் நாமம் தூஷிக்கப்படுவதையோ, அவர் திட்டம் திசைமாறுவதையோ அவர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கமாட்டார். ஆகவே, **தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக் கொள்ள வேண்டும்** (பிர. 12:13) இதுதான் நம்மேல் விழுந்த கடமை.

அப்படியானால், நம்முடைய நிலை என்ன? தேவன் வெளிப்படுத்தியுள்ள இரட்சிப்பின் திட்டத்திற்கு மாறாக, இயேசுவைக் கொண்டு கட்டியுள்ள

ஒன்றான மெய்ச்சபைக்கு எதிராக (ரோம 12:1), சொல்லப்பட்டுள்ள உண்மையான ஆராதனை ஒழுங்கிற்கு விரோதமாக நாம் செயல்படலாமா? இப்படிச் செய்வது தேவனை பரியாசம் செய்வது ஆகாதா? ஆகவே, அவரைப் பரியாசம் செய்யாமல், வேத வசனங்களின்படி விசுவாசித்து (மாற் 16:16), மனந்திரும்பி (அப். 2:38); அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10), பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16) கர்த்தராலே, அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு (அப். 2:47) உண்மையான ஆராதனையை (யோவா 4:24) அவருக்காக ஏறெடுப்போம்.

**III நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள்:-**

நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பவுலின் முதல் பிரசங்கம், தொடர்பாக நடந்தவைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் பற்றியது.

இப்பகுதியை நாம் கவனித்தால், நித்திய ஜீவனுக்கு அபாத்திரராய்த் தங்களைத் தீர்த்துக் கொண்டவர்களின் செயல்பாடும், புறஜாதியார் செயல் பாடும், நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்களின் செயல்பாடும் சொல்லப் பட்டுள்ளது. நித்திய ஜீவனுக்கு அபாத்திரராய்த் தீர்த்துக் கொண்டவர்கள் பொறாமையினால் நிறைந்தார்கள். தேவ மனிதர்களுக்கு எதிரிடையாகப் பேசினார்கள். அத்தோடு தூஷித்தார்கள். இதை வாசிக்கும் நாம் யாரும் நம்மை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராய்த் தீர்த்துக் கொண்டவர்களாகவோ அதற்குண்டான இழி குணங்களைக் கொண்டவர்களாகவோ இருந்து விடக்கூடாது.

அடுத்து, அங்கு கூடிவந்த புறஜாதியார் குறித்து வேதாகமம் சொல்லுவதைப் பாருங்கள். வசனத்தைக் கேட்டு சந்தோஷப்பட்டார்கள். அத்தோடு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். பெந்தெ கொஸ்தே நாளில் கூடியிருந்த 17 நாட்டு ஜனங்களுக்குப் பேதுரு, பிரசங்கம் செய்ததையும் அன்றைய தினம் 3000 பேர் இரட்சிக்கப் பட்டதையும் நாமறிவோம் (அப். 2 அதிகாரம்) அவர்கள் பேதுருவால் சொல்லப்பட்ட வார்த்தைகளைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் (அப். 2:41).

இங்கே, இயேசுவைப் பற்றிய பிரசங்கத்தை முதன் முதலாகக் கேட்ட இவர்கள், பெந்தெகொஸ்தே நாள் யூதர்களைப் போல தேவனுடைய வார்த்தையினிமித்தம் சந்தோஷப்பட்டுள்ளார்கள். அதுமாத்திரமல்ல, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தியுமுள்ளார்கள். கர்த்தருடைய வசனத்தின் மேன்மையை இந்த ஜனங்கள் எந்தளவு உணர்ந்து வாழ்ந்துள் ளார்கள் என்று பாருங்கள். இன்றைக்கு நானும், நீங்களும் கர்த்தருடைய வசனத்தைப் பொறுத்தளவில் எப்படி வாழ்ந்து கொண்டுள்ளோம்? வசனத்தைக் கேட்பதில் சந்தோஷப்படுகிறோமா? அவைகளின்படி வாழ்வதன் மூலம் நம்மை உண்டாக்கிக் காத்து வழிநடத்தும் தேவனை மகிமைப்படுத்துகிறோமா?.

அடுத்து, நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்களோ விசுவாசித்தார்கள் என்றுள்ளது. இங்கே நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் என்பதின் பொருளை நாம் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. குறிப்பிட்டவர்கள் தான் நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்படுவார்கள் மற்றவர்களுக்கும் அதற்கும் வெகுதூரம் என்று தப்புக் கணக்கு போட்டு விடாக்கூடாது. நித்திய ஜீவன் குறிப்பிட்டவர்களுக்கு தான் என்பது உண்மையானால், இயேசு ஏன் தன்னுடைய சீடர்களுக்கு **உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கட்டளையிட வேண்டும்?** (மற் 28:18-20). ஆகவே இதன் பொருள், யாரெல்லாம் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள **இரட்சிப்பின் திட்டத்துக்கு** ஒப்புக் கொடுத்துக் கீழ்ப்படிகிறார்களோ அவர்களனைவரும் நித்திய ஜீவனுக்கு நியமிக்கப் பட்டவர்களே.

அப்படியானால், இதை வாசிக்கும், எனதருமை நண்பரே! நீங்கள் நித்திய ஜீவனுக்கு உங்களை அபாத்திரராய்த் தீர்த்துக் கொண்டவர்களா அல்லது புதிய ஏற்பாட்டு உபதேசப்படி நித்திய ஜீவனுக்கு நியமிக்கப் பட்டவர்களா? நாம் நம்மை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராய் தீர்த்துக் கொள்ள இயேசு இப்பூமிக்கு வரவில்லை, வந்து மரிக்கவுமில்லை. நமக்காகப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பி வேத வசனங்களை நமக்காகக் கொடுக்கவுமில்லை. இப்பேருண்மை நமக்குத் தெரிய வேண்டும்.

மேலும், எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்று பவுலடியார் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது கூறுகிறார். (1தீமோ 2:4) அதுமாத்திரமல்ல, ஒருவரும் நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகக் கூடாது என்பதற்காகவே நீடிய பொறுமையுள்ளவராகவும் இருக்கிறார் (2பேது 3:9). அதே நேரத்தில் அவர் அப்படியே வராமலும் இருக்கமாட்டார். வேதாகமத்தின் கடைசி நூலாகிய வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி அதிகாரத்தில் மாத்திரம், சீக்கிரமாய் வருகிறேன் என்றும் மூன்று முறை சொல்லியுள்ளார் (வெளி. 22:7,12,20). ஆகவே, நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்களாய், கிறிஸ்துவின் வருகையை எப்பொழுதும் எதிர்நோக்குகிறவர்களாய் நாம் ஒவ்வொருவரும் வாழ்வது அவசியம்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் பவுலின் இந்த முதல் பிரசங்கம் தொடர்பாகக் கிடைத்த இப்பாடங்களைக் கொண்டு பயன்பெற்று நித்திய வாழ்வுக்கு நியமிக்கப் பட்டு, பரலோக வாழ்வுக்குப் பங்காளிகளாக மாறுவோம். அப்படி மாற தேவன் உதவி செய்வாராக!.

**E.Z.S. இராஜநாயகம்**

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# பத்தாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## திருமறை தியானம் நேயர்கள் & திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்

இடம் : YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ.)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.)

நாள் : மே மாதம் 7,8,9 - 2007 (திங், செவ், புதன்)

**சிறப்பம்சங்கள்**

* கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
* தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
* ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
* பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
* கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
* வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
* குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
* பெண்களுக்கு தனி இடவசதி.
* சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. **75 /-** சிறியவர்கள் ரூ. **50 /-**

## கிறிஸ்துவின் சபை

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382

குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு.
ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

# சுயேட்சை ஊழியர்களும் சபைகளும்

உலகில் இன்று அநேக ஊழியர்களும், சபைகளும் உள்ளன. இவைகளில் பெரும்பான்மையோர் நாமகரண கூட்டத்தார். வேறு அநேகர் தங்களை சுயேட்சை ஊழியர் என்று அழைத்து கொள்கிறார்கள். இப்படி அவர்கள் குறிப்பிடுவதன் பொருள் என்ன? எந்த ஒரு நாமகரண கூட்டத்தையும் அவர்கள் சார்ந்திருக்கவில்லை என்பது அவர்களின் கூற்று. இவர்கள் ஏதோ ஒரு காரணத்தினால் தங்களின் இஷ்டப்பட்ட வழியில் செல்லுவதை தெரிந்து கொள்கின்றனர்.

நாமகரண கூட்டங்களிடையே உபதேசக் கோட்பாடுகளில் பிரச்சனைகள் எழும்புவதினாலும், தனிநபர் மோதல்களினாலும், ஒரு புதிய ஊழியத்தைத் துவக்கும்படி ஏதுவாகிறது. சிலவேலைகள் நாமகரணக் கூட்டத்தாரின் போதனைகள் மற்றும் கைகொள்ளும் முறைகளிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ள சிலபேர் சுயேட்சை ஊழியர்களாவதும் உண்டு. தாங்கள் வசூலிக்கும் பணத்திற்கு கணக்கு கொடுக்க வேண்டிய கட்டாயம் வருவதாலும், தன் ஊழித்தை ஸ்தாபித்துக் கொண்டு, அதை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டு, அதிலிருந்து தனக்கு உலக ஆதாயத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் சிலர் சுயேட்சைகளாக மாறுவதுண்டு.

இந்தியாவிலே அநேகம் பேர் தங்களை சுயேட்சை ஊழியர் என்றும் ஊழியம் என்றும் அழைத்துக் கொள்கின்றனர். ஒவ்வொருவரும் தான் முழுநேர ஊழியரும் தன்க்கென ஒரு கூட்ட மக்களை கொண்டிருக்கவும் விரும்புகின்றனர். மற்ற ஊழியர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதை மிகவும் கடினமானதாக எண்ணுகின்றனர். அநேக வேளையில் அவர் பணத்திற்காக வேலை செய்யும் கூலியாட்களாயிருப்பார்கள். கிறிஸ்தவத்தில் மட்டும் இப்படிப்பட்ட சூழலில்லை. பிற மதங்களில் இந்நிலை இருந்து கொண்டுள்ளது. இந்தியாவில் தன்னையே குருவாக்கிக்கொள்கின்ற அநேகரைக் குறித்து சிந்தித்து பாருங்கள். உங்களைச் சுற்றிலுமிருக்கிற பாபாக்களைப் பாருங்கள். எப்போதுமே தன்னை பின்பற்றுவதற்கென்று ஒரு கூட்ட மக்களை தன்வசப்படுத்த யாராவது ஒருவர் எழும்பிக் கொண்டே இருக்கின்றனர். மனிதன் மிக எளிதாக வஞ்சிக்கப்படுகிறான் அல்லது வஞ்சிக்கப்பட விரும்புகிறான். வேதாகமத்தில் சுயேட்சை ஊழியரைக் குறித்தோ சபையைக் குறித்தோ நாம் வாசிக்கிறதில்லை என்று பார்ப்பின் அது ஒருவேளை உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். தேவனுடைய வசனத்தில் நாம் எந்த ஒரு நாமகரணக் கூட்டத்தைக் குறித்தும் வாசிப்பதில்லை. பிரிவினைகளை உண்டாக்கினவர்களைக் குறித்தும், அப்படிப்பட்டவர்களை

விட்டு நாம் விலக வேண்டும் என்பது குறித்தும் நாம் வாசிக்கிறோம். (ரோமர் 16:17,18). அதே போல கள்ள போதகர்களைக் குறித்தும், கள்ளத் தீர்க்க தரிசிகளைக் குறித்தும், கூலிக்காக ஊழியம் செய்யும் ஆட்களை குறித்தும் வேதத்தில் நாம் வாசிக்கிறோம். அவர்கள் ஆக்கினைப்பிடியிலே நிற்கின்றனர். (2பேதுரு. 2:1; 1 யோவா. 4:1; யோவா 10:12,12).

பவுலோ, பேதுருவோ மற்றெந்த ஊழியர்களோ வேதாகம ஆசிரியர்களோ இந்த சுயேட்சைகளைக் குறித்து எதுவும் பேசினதுமில்லை. விளக்கிக் கூறினதுமில்லை. அவர்கள் யாருக்கும் எதிராக செயல்படவில்லை. ஒருவருக்கொருவர் எதிராக ஊழியம் செய்யவுமில்லை, அல்லது போட்டி மனப்பான்மையும் இருந்ததில்லை. மாறாக அவர்கள் ஒன்றாக சேர்ந்து ஊழியம் செய்யவும், ஒற்றுமையாக மகிழ்ச்சிகளை அனுபவிக்கவும், பாடுகளையும் ஒன்றாக அனுபவிக்கவும் போன்ற காரியங்களிலே ஈடுபட்டனர் (அப். 2; அப் . 5:41; 1கொரி. 12:26).

பேதுருவுக்கென்று ஒரு சபையும் பவுலுக்கென்று மற்றொரு சபையும், யோவானுக்கு பிரிதொரு சபையும், யாக்கோபுக்கு என வேறு ஒரு சபையும் இருந்ததாக நாம் தேவனுடைய வசனத்தில் வாசிப்பதில்லை. அப்போஸ்தலர்களோ சபை அங்கத்தினர்களோ தங்களுக்கென்று ஒரு சபை இருந்ததாக குறிப்பிடுவதில்லை. நாம் கர்த்தருடைய சபையைக் குறித்து மட்டுமே வாசிக்கிறோம். (மத். 16:18; எபே. 5:23). வசனங்களினூடே நாம் செல்லுகையில், ஒரே ஒரு சபையைக் குறித்து மாத்திரமே குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண இயலும். (எபே. 4:4; கொலோ. 1:18) இது கிறிஸ்துவின் சபை. அது அநேக பிராந்திய சபைகளையும், அநேக அங்கத்தினர்களையும் அவை உள்ளடக்கியிருப்பதையும் அறிகிறோம். ஆளுகை அமைப்பைப் பொறுத்த மட்டில், சுயாட்சி முறையையும் அதே வேளையில் ஒன்றுக்கொன்று எதிராக ஒன்று ஊழியஞ் செய்யவோ, எதிர்க்கவோ தனது சுயேட்சையை பயன்படுத்துவதில்லை. மாறாக அவைகள் அந்நியோந்நியத்துடன், ஐக்கியத்துடன், ஒற்றுமையாக ஊழியஞ்செய்து கர்த்தருக்கடுத்த காரியத்தில் ஆர்வம் காட்டின.

தனிநபர் ஒருவர் சுயேட்சையாக இருப்பது என்பது அல்லது ஒரு பிராந்திய சபை சுயேட்சையாக இயங்குவது என்பதன் பொருள். கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் மேலாக உங்களை உயர்த்தி சுயேட்சையாக இருக்கவே விரும்புகிறீர்கள். ஆதலால் நீங்கள் கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் எதிராக ஒரு போட்டியாளராக திகழுகிறீர்கள். அதாவது அவரோடு நீங்கள் இருப்பதற்கு பதில் அவருக்கு எதிராக நீங்கள் செயல்பட்டு, அவருக்காக இருப்பதை விடுத்து, அவரது காரியங்களை எதிர்க்க கூடியவராயிருப்பீர்கள் (மத். 12:30). இதை தான் நீங்கள் விரும்புகிறீர்களா? உங்கள் வாழ்க்கையிலே இதுதான் உங்கள் ஊழியமா? நீங்கள் என்ன

செய்கிறீர்கள் என்பதைக் குறித்து சோதித்து சிந்தித்து உங்களை நீங்கள் சரி செய்து கொள்வது அவசியமானது.

நீங்கள் சுயேட்சையாக இருக்க விரும்பினால், தேவன் உங்களில் ஆர்வம் காட்டுவதில்லை. சுயேட்சைகள் எல்லாம் கிறிஸ்தவர்களல்ல. கிறிஸ்தவர்களெல்லாரும் சுயேட்சைகள் என்பது தான் உண்மை. நீங்கள் மனிதனால் தோற்றுவிக்கப் பட்ட சபையை எதிர்க்கக் கூடியவராயிருப்பின், இன்னொரு சபையை உருவாக்கி அவர்கள் கூட்டத்தின் (மறைமுகமாக) நீங்களும் சேர்ந்து கொள்ளாமல், கர்த்தருடைய சபையில் ஒரு அங்கமாயிருங்கள். பிரசங்கம் செய்ய நீங்கள் விரும்பினால், பிரசங்கியுங்கள், ஆனால் சத்தியத்தை மாத்திரம். (2தீமோ. 4:2) உங்கள் சுய விருப்பத்தின்படி சொல்ல உங்களுக்கு யாரும் அதிகாரமளிக்கவில்லை. அதன் மூலம் மார்க்க அமைப்பை உருவாக்கி அதிலே ஜனங்களை அங்கமாக்கவும் அதிகாரமளிக்கவில்லை. அது சுயேட்சையாக இருக்கலாம். அவ்வளவுதான். இதன் விளைவு நீங்கள் இழந்து போனவராகவும் உங்களை பின்பற்றுகிறவர்களும் இழந்து போனவர்களாகவுமே காணப்படுவீர்கள்.

நீங்கள் வேதத்திற்குத் திரும்பி, புதிய ஏற்பாட்டின் தூய்மையான கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். தேவன் மீது விசுவாசம் வைத்து, பாவங்களிலிருந்து திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, உங்கள் பாவங்களுக்காக ஞானஸ்நானம் பண்ணப்படுங்கள் (மாற்கு. 16:15,16; அப். 2:38). அப்பொழுது கர்த்தர் உங்களை இரட்சித்து தமது சபையிலே சேர்த்துக் கொள்வார். (அப். 2:47,20:48) இது உங்களை ஒரு நாமகரண கூட்டத்தானாக்காமல், உங்களை கிறிஸ்தவனாக மட்டும் மாற்றுகிறது. (1பேதுரு. 4:16). இதற்குப் பிறகு வேதத்தை பிரசங்கியுங்கள், போதியுங்கள், நீங்கள் அவருக்கு கீழ்ப்படிந்தது போலவே அவர்களையும் கீழ்படிய உற்சாகமளியுங்கள். அப்பொழுது மாத்திரமே நீங்கள் சரியானவராக இருக்க முடியும். அப்பொழுது மாத்திரமே நீங்கள் விடுதலை பெற்றவராவீர்கள். (யோவான் 8:32)

**J.C. Choate** **J.C. சோட்**

## நீதிமொழிகளில் புத்திமான்

- தன் உதடுகளை அடக்குகிறவன் [10:9]
- நீடிய சந்தமுள்ளவன் [14:29]
- ஞானம் உள்ளவன் [10:23]
- தன் நடக்கையை செம்மைப்படுத்துகிறவன் [15:21]

பெண்கள் பகுதி

# லோவிசாள், ஐனிக்கேயாள்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, நம்முடைய கர்த்தரும் அருமை இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்திலே உங்களுக்கு வாழ்த்துதலை கூறிக்கொள்கிறேன். இம்மாதம் தேவனுடைய வார்த்தைகளை வேதத்திலிருந்து படித்து தியானிப்பதற்கு தேவன் அனுமதி அளித்ததற்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். லோவிசாள் ஐனிக்கேயாள் என்ற இரண்டு மகத்தான ஸ்திரீகளைப் பற்றி படித்து தெரிந்து கொள்வோம். இவர்கள் இருவரும் தாய், மகள், உறவு கொண்டவர்கள். தீமோத்தேயு 1:5-ல் இவர்களைப் பற்றி படிக்கலாம்.

**அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும்.உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்.**

லோவிசாள் ஒரு பக்தியுள்ள யூதப் பெண். நியாயப்பிரமாணங்களை தன் மகளுக்கும் தன் பேரக்குழந்தைக்கும் நன்றாக கற்றுக் கொடுத்திருந்தாள். லோவிசாளின் குடும்பம் லீஸ்திராவிலே தங்கி இருந்தது. பவுல் தன் சுவிசேஷப் பயணத்திலே லீஸ்திராவுக்குச் சென்ற போது லோவிசாள் ஐனிக்கேயாள், தீமோத்தேயு ஆகிய மூவரையும் கிறிஸ்துவுக்குள்ளாக வழி நடத்தக் கூடிய சிலாக்கியம் கிடைத்தது. (அப். 14:6,7, 16:1), அதன் பிறகு அவர்களுக்குள் நிலைத்திருந்த மாயமற்ற விசுவாசத்தைப் பற்றி எழுதுகிறார் பவுல். லோவிசாள் தான் சத்தியத்தை அறிந்து கொண்ட நாளிலிருந்து தன் மகளையும், தன் பேரனையும் அந்த சத்தியத்திற்குள் வழி நடத்தினாள். தேவ பயமுள்ள பெற்றோர்களால் மட்டுமே அவிசுவாசக் கூட்டத்திற்குள் இருக்கும் ஒருவனை மீட்டு அவனை கிறிஸ்துவின் பிள்ளையாக மாற்ற முடியும். (1கொரி. 7:14, 2தீமோ 3:15) இங்கே பவுல் அழகாக குறிப்பிட்டிருக்கிறார், விசுவாசத்தில் தான் பெற்ற உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு விசுவாசம் அவன் தாயாரிடமிருந்தும், அவன் பாட்டியிடமிருந்தும் வந்தது என்று பாட்டியின் ஸ்தானத்திலிருக்கும் இன்று எத்தனை பேர் தீமோத்தேயுக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்? லோவிசாள் பாட்டி, விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவை உருவாக்கினதில் சரி பங்கு செயலாற்றி இருக்கிறாள். இந்த தீமோத்தேயு அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்திற்கு தோள் கொடுத்த ஓர் அருமையான இளைஞன்.

அடுத்தது தீமோத்தேயுவின் தாயாகிய ஐனிக்கேயாள் அவளைப் பற்றி (அப். 16:1-3, 2 தீமோத்தேயு 1:5, 3:15,4:5) ஆகிய வசனப்பகுதிகளில் காணலாம். இவளுடைய பெயருக்கு அர்த்தம் போராடி ஜெயிப்பவள். ஆம் தன் மகனை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்ப்பதற்கு அதிக முயற்சி எடுத்து வெற்றி பெற்றவள். லோவிசாளின் மகளாகிய இந்த ஐனிக்கேயாள் ஒரு யூத ஸ்தீரி. தன் மகனை சிறிய வயதில் இருந்தே நியாயப் பிரமாணங்களை கற்பதில் ஊக்கப்படுத்தியவள். தீமோத்தேயுவின் ஆவிக்குரிய நிலையை விளக்குகையில் அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறாகக் கூறுகிறார். **நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்தி ருக்கிறதுமல்லாமல் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக் கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்** (2 தீமோ 3:14,15) பரிசுத்த ஆவியானவர் தீமோத்தேயுவுக்கு இவ்வளவு புகழாரம் சூட்டுகிறார் என்றால் அதற்கு காரணம் அவள் தாயும், பாட்டியும் தான் **பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்** (நீதி 22:6), என்ற வசனத்தின்படி தீமோத்தேயு வளர்க்கப்பட்டான். அதற்கு முழுக்காரணமும் அவன் தாய் ஐனிக்கேயாளும், பாட்டி லோவிசாளும் தான். தீமோத்தேயு என்ற பெயருக்கு அர்த்தம் தேவனுக்கு பயப்படுபவன் என்பதாகும். இவன் தாயும், பாட்டியும் நியாயப் பிரமாணங்களில் மிகவும் தேறினவர்களாயிருந்த படியால் பவுல் இவர்களுக்கு இயேசுவைப் பற்றியும் பாவிகளை இரட்சிக்க அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் விளக்கினபோது அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். தன்னால் மிகவும் அதிகமாக நேசிக்கப்பட்ட தன் மகன் தீமோத்தேயு அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஊழியக்காரனானதைப் பார்த்து பூரித்துப் போய் தேவனுக்கு எவ்வளவு நன்றிகளை செலுத்தியிருப்பாள், இந்த ஐனிக்கேயாள். **உன்னை பெற்றவள் மகிழுவாள்.** (நீதி. 23:25) என்ற வசனத்தின் படி ஐனிக்கேயாள் மகிழ்ந்து போயிருப்பாள். இதை விட பாக்கியம் ஒரு தாய்க்கு என்ன வேண்டும்.

தீமோத்தேயுவின் வாழ்க்கையின் மூலம் பெற்றோர்களின் பொறுப்பு எந்த அளவு ஒரு குடும்பத்தில் அவசியமாய் இருக்கிறது, தன் பிள்ளைகளுக்கு எந்த அளவு கிறிஸ்தவப் பயிற்சி குடும்பத்தில் தேவைப்படுகிறது, அப்பயிற்சியின் மதிப்பு எவ்வளவு என்பதை பெற்றோராகிய நாம் அறிந்து கொள்ள வேண்டும். **நீ கற்று நிச்சயித்து கொண்டவைகளில் நிலைத்திரு. அவைகளை நீ இன்னாரிடத்தில் கற்றாய் என்பதை அறிந்திருக்கிறாயே** என்று பவுல் சொல்லுகிறாரென்றால் தீமோத்தேயுவின் பெருமை அவன் குடும்பத்தின் மூலம் தான் கிடைத்தது என்பது நன்கு விளங்குகிறது.

தீமோத்தேயுவுக்கு கிடைத்த சிலாக்கியம் எல்லா குழந்தைகளுக்கும் கிடைப்பதில்லை. காரணம் பெற்றோர்கள் தான். பெற்றோர் தம் பொறுப்பை தட்டிக் கழிப்பதினால் ஊழியர்களை உருவாக்க முடிவதில்லை.

லோவிசாள், தன் மகளை கர்த்தருடைய சிட்சையிலும், போதனையிலும் வளர்த்தாள். ஐனிக்கேயாள் தன் மகனை கர்த்தருக்குள் வழி நடத்தினாள். இதை வாசிக்கும் அருமை சகோதரிகளே, நாம் எங்கு இருக்கிறோம், வேதத்திலுள்ள உதாரணங்கள் தான் உண்மையானது. என்றும் எக்காலத்துக்கும் போதுமானது. ஏதோ வாசித்தோம் முடித்தோம் என்றில்லாமல் நம் பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்வுக்கு முன்னுரிமை, அதிக நேரம், அதிக மதிப்பு, முதலிடம் கொடுத்து ஊழியக்காரர்களை தாங்குவோம். ஊழியத்தை தாங்குவோம். ஊழியக்காரர்களை உருவாக்குவோம். உலக பொருள்களை பெரிதாக நம்பி ஏமாந்து போக வேண்டாம். என்றும் அழியாத வேத வசனங்களை தலைக்கு மேல் ஏற்று நாமும் அதன்படி செய்து நம் மக்களையும் அவ்வசனத்தின்படி வாழ அனுமதிப்போம். இம்மைக்கும் அது ஆசீர்வாதமானது. மறுமைக்கும் போதுமானது. தாய்மார்களே! சற்று சிந்தித்துப் பார்ப்போம். உலகத்தோடு உலகமாக நாம் மாறாமல் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பரிசுத்த வாழ்க்கையை மேற்கொள்வோம். தீமோத்தேயுவைப் பற்றி பேசும்போது அவன் தாயும், பாட்டியும் நினைக்கப்பட்டே ஆக வேண்டும்.

எனவே, பாட்டியாக இருப்பீர்களானால் லோவிசாளைப் போலவும், தாய்மார்களாக இருப்பீர்களானால் ஐனிக்கேயாளைப் போலவும் செயல்படுவோம்.

தீமோத்தேயு பவுலுக்கு உதவியாக இருந்து சபைகளை ஸ்திரப்படுத்தினது போல நாமும் தீமோத்தேயுக்களை உருவாக்கி சபைகளை தாங்குவோம். புதிய ஏற்பாட்டு உபதேசம் உலகமெங்கும் பரவ நாம் பாடுபட்டு பிரயாசப்படுவோம். அப்படிச் செய்ய பரலோகத்தின் தேவன் உதவி செய்வாராக! ஆமென்

**ரேச்சல் ராஜநாயகம்**

## கிறிஸ்துவாகிய கல்

- *ஜீவனுள்ள கல் (1பேதுரு 2:4,5)*
- *இடறுகிறதற்கான கல் (ரோம 9:32,33)*
- *நசுக்கிப் போடும் கல் (மத். 21:44)*
- *விலையேறப் பெற்ற கல் (1பேதுரு 2:6,7)*
- *கைகளால் பெயர்க்கப்படாத கல் (தானி 2:34,35)*

வாலிபர் பகுதி

# வாலிபனே உனக்காக

வாலிப நெஞ்சங்களே! உங்களை இந்தக்கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பரீட்சை காய்ச்சல் உங்களைப் பிடித்திருக்கும் இந்த மாதத்தில் நீங்கள் தேர்வுகளை சிறப்பாக எழுதி அதிக மதிப்பெண்களை பெற நான் தேவனை மன்றாடுகிறேன். நீங்கள் பிரயாசப்பட்டுப்படிக்க வேண்டுமென்று உங்களை கேட்டுக் கொள்கிறேன். உலகில் உள்ள எல்லா மனிதர்களுக்கும் அறிவை பெற்றுக் கொள்ள வேண்டு மென்ற ஆசை இருக்கிறது. மனிதன் எப்போது தேவனால் சிருஷ்டிக்கப் பட்டானோ அப்போது இருந்தே அவனுக்கு இந்த ஆசை இருந்து கொண்டே இருக்கிறது. ஏதேன் தோட்டத்தில் பிசாசு ஏவளை வஞ்சித்ததே தனக்குக் கீழ்ப்படிந்தால் அறிவை பெற்றுக் கொள்ளலாம் என்று பிசாசு ஏவாளிடம் சொன்னதால் தான். சாலொமோன் ஞானி சொல்லும் போது கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி 1:7) என்று சொல்கிறார். நாம் ஞானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சிரமப்பட அவசியமில்லை. சில இளைஞர்கள் தங்கள் கவனத்தை வேறு பக்கமாக அல்லது படிப்பின் மீது அல்லாமல் தாங்கள் எதில் நாட்டம் வைத்திருக்கிறார்களோ அதன்மீது வைத்து விட்டு எனக்கு படிப்பு வரவில்லை நான் ஞானத்தை எப்படி பெற்றுக் கொள்வது என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனதருமை வாலிப நெஞ்சங்களே, நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்று தான், அது கர்த்தருக்கு பயப்படுவது தான். அப்போது கர்த்தர் நீங்கள் பரீட்சையிலும், உங்கள் வாழ்க்கையிலும் சிறந்து விளங்குவதற்கு கர்த்தர் ஞானத்தைக் கொடுப்பார். எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய கர்த்தரும் இரட்சகரு மாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் நீங்கள் வளரவேண்டும் (2 பேதுரு 3:18).

வாலிப நெஞ்சங்களே! தேவன் நமக்காக அருமையான காரியங்களை வைத்திருந்தாலும் அநேக வாலிபர்கள் பிசாசு இந்த உலகத்தில் வைத்திருக்கும் பாவ காரியங்களை நாடிச் செல்கிறார்கள். நாம் பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கும்போது உலகமுழுவதும் பொல்லங்கனுக்குள் கிடக்கிறதென்று பார்க்கிறோம். பிசாசானவன் வாலிபர்களை பணம், புகழ், கவர்ச்சி போன்ற வலைகளில் பிடித்துக் கொள்கிறான். சுவிசேஷம் என்னும் வலையை விரித்து தேவனுக்காக அநேகரைப் பிடிக்க வேண்டிய வாலிபர்கள் தாங்களே சாத்தானின் வலையில் சிக்கிக் கொள்கிறார்கள். இது மிகவும் வேதனையான காரியம். பெரும்பாலான வாலிபர்கள் தங்களுடைய பெரும்பாலான நேரத்தை உலகப்பிரகாரமான காரியங்களில் செலவிடுகிறார்கள்.

நாம் எபேசியர் 5:15,16 வசனங்களில் வாசிக்கும்போது, ஆனபடியினாலே **நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவை களானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்** என்று வாசிக்கிறோம். இந்த உலகத்தில் மிகவும் விலையர்ந்தது நேரமாகத்தான் இருக்கும். கிரேக்க தத்துவஞானியாகிய சாக்ரடீஸ் சொல்லும் போது ஒருவனிடம் இருக்கும் சொத்து அல்லது உடமைகளில் எல்லாம் சிறந்தது நேரம் தான் என்று சொன்னார். நாம் நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் அநேக தேவனுடைய தாசர்கள் நேரம் அல்லது காலத்தின் தன்மைப் பற்றி சொல்லியிருக்கிறதைப் பார்க்க முடியும். பக்தனாகிய யோபு சொல்லும்போது **என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது** (யோபு 7:6) என்று சொல்கிறார். இந்த வசனத்தில் யோபு தன்னுடைய ஜீவிய நாட்களின் தன்மையைப் பற்றி விளக்குகிறார். யோபு சொல்வது முற்றிலும் சரியானதே. இந்த நாட்களில் நேரமானது ஒளி மற்றும் ஒலியை விட வேகமாகச் செல்கிறது. அந்த வேகத்தோடு ஈடுகட்ட முடியாவிட்டால் நாம் மிகுந்த சிரமத்திற்குள்ளாவோம். இந்த சந்தர்ப்பத்தை சாத்தான் நன்றாக பயன்படுத்திக் கொண்டு வாலிபர்களின் நேரத்தை அவர்களுடைய கவனத்தை வேறு திசையில் திருப்பி விட்டு வீணடித்து விடுகின்றான். ஆனால், நாம் பிசாசுக்கு இடங்கொடுக்கக் கூடாது.

மத்தேயு நான்காம் அதிகாரத்தில் நாம் பார்க்கும் போது சாத்தான் நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை தன்னுடைய வலையில் சிக்க வைக்க பார்த்தான். ஆனால் முடியவில்லை. சாத்தான் நம் தேவனைப் போல சர்வ ஞானியல்ல அவனுக்கு எல்லாம் தெரியாது. ஆனால், அவன் நம்முடைய நடவடிக்கைகளை கூர்ந்து கவனிப்பதால் நம்முடைய பலவீனங்களை அறிந்து கொள்கிறான். (யாக்கோபு 1:14)ல் நாம் வாசிக்கும்போது "**அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்**" என்று பார்க்கிறோம். சாத்தான் நம்மைக் கூர்ந்து கவனித்து நாம் எதில் பலவீனமாயிருக்கிறோம் என்பதை அறிந்து கொண்டு நம்மை தன்னுடைய வலையில் சிக்க வைக்கப் பார்க்கிறான். நம்முடைய இருதயத்தின் நினைவுகள் சாத்தானுக்குத் தெரியாது. நம்முடைய மனதுக்குள்ளேயே அவன் கிரியை செய்கிறான் என்ற கருத்துத் தவறானது. சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு மாத்திரமே நம்முடைய இருதயத்தின் நினைவுகள் தெரியும்.

ஆனால், அதே நேரத்தில் சாத்தானுடைய வல்லமையை நாம் குறைவாக மதிப்பிட்டு விடக்கூடாது. பேதுரு சொல்லும் போது, "**உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான் என்கிறார்**".

(1பேதுரு 5:8). ஆனால் 1யோவான் 4:4ல் நாம் வாசிக்கும் போது "**உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்**" என்று பார்க்கிறோம். எனவே நம்மிலிருக்கிற தேவன் பிசாசை விடப் பெரியவராக இருப்பதால் பிசாசுக்கு நாம் எதிர்த்து நின்றால் அவன் நம்மை விட்டு ஓடிப் போவான் (யாக்கோபு 4:7) சரி இப்போது தேவன் நமக்காக வைத்திருக்கும் அருமையான காரியங்களை கவனிப்போம்.

## I அருமையான சிலாக்கியம் - வசனத்தைக் கேட்கும்படி

பிரியமானவர்களே, அநேகர் இந்த உலகத்தில் இன்றும் ஒரே ஒரு சுவிசேஷ பிரசங்கத்தைக் கூட கேட்டதில்லை. இந்த உலகத்தில் அநேக பணக்காரர்கள் அநேக காரியங்களை கேட்டிருக்கலாம், பார்த்திருக்காலம். ஆனால், அவைகள் ஒன்றுமே சுவிசேஷப் பிரசங்கத்திற்கு ஈடாகாது. சுவிசேஷமாகிய தேவனுடைய வார்த்தையில் வல்லமையிருக்கிறது. அதில் ஜீவன் இருக்கிறது. எனவே தான், அது ஆத்துமாவை இரட்சிக்கிறது. இப்படிப்பட்ட தேவனுடைய வார்த்தைகளால் நம்மை நாம் நிரப்பிக் கொள்ள வேண்டும். எனவே நாம் தேவனுடைய வார்த்தைகளை தியானிக்க வேண்டும். சங்கீதக்காரன் சொல்லும்போது "**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது**" (சங்கீதம் 119:105). இது மெய்தான். ஏனென்றால், இருள்சூழ்ந்த நம்முடைய வாழ்க்கைக்கு நல்ல பாதையை காட்டக்கூடிய வெளிச்சமாய் தேவனுடைய வசனம் இருக்கிறது. வாலிபராகிய நாம் நம்முடைய வழியை எதினால் சுத்தம் பண்ண முடியும்? வேத வசனத்தின் படி நம்மை காத்துக் கொள்ளுகிறதினால் தானே! ஆனால் தேவனுடைய வசனத்தை நாம் தியானித்தால் மாத்திரம் போதாது அல்லது தேவனுடைய வசனத்தால் மாத்திரம் நிரப்பப்பட்டால் போதாது. மாறாக, அதை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போது தான் தேவனிடத்திலிருந்து முழுமையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இதைப்பற்றி யாக்கோபு ஆசிரியர் சொல்லும்போது அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிற வர்களாயும் இருங்கள் என்று கூறுகிறார் (யாக்கோபு 1:22).

## II அருமையான வார்த்தைகள் - விசுவாசிக்கும்படி

பலவிதமான நெருக்கடிகளிலிருந்து தேவன் நம்மை விடுவித்த விதத்தை நினைத்துப் பாருங்கள். அதற்குக் கைம்மாறாக, தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது அவரை விசுவாசிப்பதுதான். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று எபிரெயர் 11:6ல் நாம் வாசிக்கிறோம். விசுவாசமில்லாமல் சந்தேகப்படு கிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பா யிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையா

திருப்பார்கள். இந்த உலகத்தில் அநேகர், கென்னடி, காந்தி, போன்றோர் அப்படி செய்தார்கள், இப்படி செய்தார்கள் என்று அவர்களை நேரில் கண்டிராமல் வரலாற்றை படிப்பதன் மூலமாகவோ அல்லது மற்றவர்கள் சொல்லக் கேட்டோ நம்புவார்கள். ஆனால், தேவன் நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார். இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசிக்க மறுப்பார்கள். பிரியமானவர்களே! நம்முடைய விசுவாசத்தின் அளவிற்கேற்பதான் நம்முடைய ஆசீர்வாதத்தின் அளவும் இருக்கும். எனவே, நாம் தேவனிடத்தில் எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும் என்று கேட்க வேண்டும்.

## III அருமையான தேவன் - நாம் ஆராதிக்கும்படி

நாம் ஆராதிக்கும் ஜீவனுள்ள தேவன் எவ்வளவு அருமையானவர் என்பதை அநேக வேளைகளில் நாம் மறந்து போகிறோம். தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்த எல்லா நன்மைகளையும் எண்ணிப்பார்த்தால் நாம் அவரை எப்போதுமே துதிக்கத்தூண்டும். ஆனால், நாம் அவைகளை எண்ணிப்பார்ப்பதில்லை. தேவன் ஒரு நன்மையை செய்யும் போது அந்த நேரத்தில் மாத்திரம் அதற்காக தேவனுக்கு ஒப்புக்கு ஒரு நன்றி சொல்கிறோம். பின்பு மறந்து விடுகிறோம். தேவனுடைய அன்பின் ஆழம், உயரம், நீளம், அகலம் அவர் நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினதால் விளங்குகிறது. இதில் தேவனுடைய அன்பு விளங்குகிறது (யோவான் 3:16). அவருடைய இரக்கம் விளங்குகிறது (எபேசியர் 2:4). அவருடைய கிருபை விளங்குகிறது (எபேசியர் 2:8). இப்படிப்பட்ட அருமையான தேவனை நாம் கொண்டிருப்பது மாபெரும் பாக்கியமாகும்.

*பென்னி மார்ட்டின்*

### ஞானஸ்நானம் பெற்ற பின் என்ன செய்ய வேண்டும்

- *தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் (மத். 6:33)*
- *தேவதத்தை தியானிக்க வேண்டும் (2 தீமோத் 2:15)*
- *தேவனோடு ஜெபத்தின் மூலம் பேச வேண்டும் (பிலிப்பி 4:6,7)*
- *பிறருக்கு போதித்து இரட்சிப்பிற்குள் வழி நடத்த வேண்டும் (மத். 28:19,20)*

# ராஜாவிடமிருந்து ஒரு கடிதம்

சிறுவர் பகுதி

எனதருமை சிறுதம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து இம்மாதமும் உங்களோடு கூட தேவனுடைய காரியங்களை கற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த சிறுவர் பகுதி மூலமாக நீங்கள் தெரிந்து கொள்ளும் காரியங்கள் உபயோகமாகவே இருக்கும் என நம்புகிறேன்.

சரி, இம்மாதம் ராஜாவிடமிருந்து ஒரு கடிதம் என்ற தலைப்பிலிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ளப்போகிறோம்.


பல ஆண்டுகளுக்கு முன்பு பாபிலோன் என்ற சாம்ராஜ்யம் இந்த உலகையே ஆண்டு வந்தது. அதின் ராஜாவாக நேபுகாத் நேச்சார் இருந்தான். உலகத்துக்கே ராஜாவாக இருந்த அவன் உலகிலிருக்கும் எல்லா இடத்திற்கும் ஒரு கடிதம் அனுப்பினான். அதில் அவன் ஒரு மரத்தைப் பற்றி, அவன் கண்ட கனவைக் குறித்து எழுதினான். என்ன தான் அந்த மரம் மிகப் பெரியதாகவும், மக்களுக்கு கனிகளையும் நிழலும் தருவதாயிருந்தாலும், வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து அந்த மரத்தை வெட்டிப் போட்டான்.

நேபுகாத்நேச்சார் தானியேல் என்ற தேவனுடைய தீர்க்கதரிசியிடம் அதின் அர்த்தத்தை கேட்டான். தானியேல் சரியான விளக்கம் கொடுத்தான். என்ன விளக்கம்? தொடர்ந்து படியுங்கள். ராஜாவாகிய நீர் பெருமையினால் நிறைந்திருக்கிறீர், தன் சொந்த ஞானத்தினாலே பூமியை ஆளுகிற நினைப்பு உள்ளவருமாயிருக்கிறீர். நீர் இதை நிறுத்தாவிட்டால் அந்த மரம் வெட்டப் பட்டது போல் உமக்கும் ஆகும். இது தேவனிடமிருந்து உமக்கும் வரும் எச்சரிக்கை என்றான்.

இந்த சம்பவம் முடிந்த பின்பு, ஒரு நாள் ராஜாவானவன் அரண்மனை யிலிருந்து தேசத்தைப் பார்த்து **"நான் கட்டின தேசம்"** என்று தனக்கு தானே சிந்தித்து பெருமைபட்டான். அடுத்தது என்ன ஆயிற்று தெரியுமா?

உடனே அவன் மிருகமாக மாறினான். ராஜா கால்நடைகளைப் போல புல் தின்ன ஆரம்பித்தான். அவன் முடி கழுகுகளைப் போல் வளர்ந்தது. நகங்கள் பறவைகளின் நகம் போல் மாறின. கொஞ்சம் சிரிப்பாகத்தானே உள்ளது!. ஆனால், உண்மையிலேயே அவன் அப்படி மாறினான்.

சில காலம் சென்ற பின் தேவன் அவனை மிருகத்திலிருந்து மீண்டும் மனிதனாக மாற்றினார். அவனுக்கு தேவன் ஒரு பாடம் கற்பித்தார். அதினால்



தான் நான் முன்னே சொன்னது போல எல்லாருக்கும் இதை உணர வைக்க கடிதம் எழுதினான்.

இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன தெரியுமா? "தேவன்தான் வல்லமையுடையவர். சகலமும் அவரை சார்ந்தே உள்ளது. என்னதான் நம் முயற்சியால் காரியம் நடந்தாலும் தேவன் தான் எல்லா நன்மையும் செய்கிறார். எல்லா மகிமையும் அவருக்கே உரியது".

இந்த பாடம் நமக்கு முக்கியம். பெருமை தேவன் வெறுக்கும் ஒரு காரியம். நமக்கு அது இருந்தால் நம் பிதாவின் ஆசீர்வாதம் நமக்கு இராது.! ஆகவே, அருமை குழந்தைகளே, தாழ்மையை அணிந்து தேவனால் உயர்த்தப் படுவோம்.

**R.A.R. NAYAGAM**

## நாளும் நடப்பும்

1. மத்திய இரயில்வே பட்ஜெட்டில் தமிழகத்துக்கு 5 புதிய இரயில்கள்
2. தமிழ்நாட்டில் நீர்வளம் மற்றும் நிலவளங்களை ஒருங்கிணைத்து மேம்படுத்த உலக வங்கி 2547 கோடி ரூபாய் கடனாக வழங்குகிறது.
3. சிமெண்ட் விலை உயராது, உயர்த்திய விலையைக் குறைக்க இயலாது உற்பத்தியாளர்கள் உறுதி.
4. ராமேசுவரம் தீவு பகுதியை நிலப்பகுதியுடன் இணைக்கும் பாம்பன் ரயில் பாலத்தில் அகல ரயில் பாதை அமைக்கப்படுகிறது.
5. தமிழ்நாட்டில் மருத்துவம், பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கான நுழைவுத்தேர்வு முறை ரத்து – கலாம் ஒப்புதல்.
6. 2,000 கி.மீ. தொலைவில் உள்ள தரை இலக்கை தாக்கக்கூடிய "ஷகீன்" ஏவுகணையை வெற்றிகரமாக பாகிஸ்தான் செலுத்தியது.
7. ஜமைக்காவில் 9வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி மார்ச் 11–ல் கோலகலமாக தொடங்கியது.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த மாதம் ஞானப்பாட்டுகளை பாடும்போது இசைக் கருவிகளை பயன்படுத்துவதை சிலர் நியாயப்படுத்த முயற்சிப்பது சம்பந்தமான வாக்குவாதத்தை நாம் விவரமாக ஆராய்ந்தோம். அந்த வாக்குவாதம் என்னவென்றால் கிரேக்க பதமாகிய "ஸாலோ" பாடிக்கீர்த்தனம் பண்ணி என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது அல்லவா அதனுடைய அர்த்தம் இசைக்கருவியின் தந்தியை அடிப்பது என பொருள்படும் என்று சொல்கிறார்கள். அந்த வாக்குவாதம் முற்றிலும் தவறானது என்று நாம் பார்த்தோம்.

இந்த வாரம், கீழ்க்காணும் கேள்வியுடன் தொடங்க விரும்புகிறோம். "ஸாலோ" என்கிற கிரேக்க வார்த்தை இசைக் கருவியின் தந்தியை அடிப்பது அல்லது மீட்டுவது என பொருள் பட்டால் எப்படி?

எபேசி 5:19 ஒரு கட்டளை இந்த கட்டளைக்கும் தேவனிடத்திலிருந்து நாம் பெற்றிருக்கும் எல்லாக் கட்டளைகளுக்கும் நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமானால் கீழ்ப்படிய வேண்டும். எபே. 5:19, ஸாலோ என்கிற கிரேக்க வார்த்தை இசைக்கருவியின் தந்தியை மீட்டுவது என பொருள்பட்டால் தேவனை ஆராதிக்க ஒவ்வொருவரும் இசைக்கருவியை பயன்படுத்த வேண்டும்.

ஆயினும், இந்த போதனையை போதிக்கிறவர்கள் இசைக்கருவிகளை பயன்படுத்தியோ, பயன்படுத்தாமலோ தேவன் அங்கிகரிக்கிற விதமாக அவரை ஆராதிக்க முடியும் என்று சொல்கிறார்கள். இது தேவன் இந்த வசனத்தில் சொல்லுகின்ற காரியத்தோடு ஒத்துப்போகிறதா? தேவன் இந்த வசனத்தில் சொல்லுகின்றவைகளோடு இந்த உபதேசம் ஒத்துப்போகிற தில்லை என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்! நாம் தேவனை பிரியப்படுத்த வேண்டுமானால் அந்த உபதேசத்தை புறக்கணிக்க வேண்டும்.

இதோ அடுத்த கேள்வி

இந்த பாடத்தைப் பற்றி வரலாற்றின் சாட்சியம் என்ன? நிச்சயமாகவே, வரலாற்று ஆசிரியர்கள் தேவனால் ஏவப்பட்டு எழுதவில்லை ஆயினும் புதிய ஏற்பாட்டைப் பற்றி நம்முடைய புரிந்து கொள்ளுதல் சரியாக இருந்தால் ஞானப்பாட்டுகளைப் பாடும்போது ஆதிச் சபை இசைக்கருவிகளை பயன்படுத்தவில்லை என்ற உண்மையை பதிவு செய்திருப்பதை நாம் நம்ப வேண்டும். ஆதிக்கிறிஸ்தவர்கள் அக்காலத்தில் அநேக இசைக்கருவிகள் இருந்தாலும் அவைகளை ஆராதனையின் போது பயன்படுத்தவில்லை. இந்தக் இசைக்கருவிகளின் பயன்பாட்டை பற்றி வரலாற்று ஆசிரியர்கள் சொல்கின்ற காரியங்களை நாம் கவனிப்போம்.

யூத ஆராதனை ஒழுங்குகளில் இசைக்கருவிகளை பயன்படுத்துவது ஒருபோதும் ஒரு பங்காக இருந்ததில்லை, மேலும் ஜெப ஆலயங்களில் இசைக் கருவிகளை பயன்படுத்துவது அறிமுகம் செய்யப்படவுமில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகள் வரை, ஆதாரம் : யூதக் கலைக்களஞ்சியம் பாகம் IX பக்கம் எண் 432.

கிறிஸ்துவின் சபை ஓர் அறிமுகம் என்ற புத்தகத்தின் பக்கம் எண் 48ல் மேற்கூறப்பட்ட இந்த வரலாற்று ஆசிரியர்களின் கூற்று மேற்கோள் காட்டப் பட்டிருக்கிறது. "பாடப்பட்ட இனிமையான பாடல்களோடு இசைக்கருவிகள் இணைந்தது அநேக நூற்றாண்டுகளுக்கு பிறகுதான்"

குர்ட்பேலன் உலகத்தின் இசை

பக்கம் எண் 27.

ஆதிசபையில் பாடல்கள் மாத்திரம் தான் இருந்தது. இசைக்கருவிகள் பயன்படுத்துவது அனுமதிக்கப்படுவதில்லை.

ஹகோ லெஷ்டென்ட்ரீட்
புத்தகத்தின் பெயர் : இசை வரலாறு
மற்றும் எண்ணங்கள் பக்கம் 34.

பாடல்களோடு "இசைக்கருவிகளின் உபயோகத்திற்கு எதிரான எதிர்ப்பு அநேக வருடங்கள் நீடித்தது".

ஜான் கர்ட்ஸ், சபை வரலாறு
பாகம் 1 பக்கம் 376.

ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆராதனை ஒழுங்குகளில் பணித்தது வாய் ரீதியிலான இசையைத்தான்

பிராங்க் லேண்டன்
சபை இசையின் பரிணாம வளர்ச்சி
பக்கம் எண் 42

சபையில் இசையானது அப்போஸ்தலர்களைப் போல் பழமையானது ஆனால் இசைக்கருவிகளைப் பயன்படுத்தி இசைக்கும் இசை அப்படியல்ல. இசைக் கருவிகளை பயன்படுத்தி இசைக்கும் இசை பழமையானதுதான் ஆனால் சபை ஆராதனையில் அல்ல.

ஜோசப் பிங்காம்
கிரியைகள் பாகம் II பக்கம் 482

மேற்கூறப்பட்ட வாக்கியங்களெல்லாம் ஆச்சரியமாக இருக்கிற தல்லவா! இந்த வரலாற்று ஆசிரியர்கள் ஆதி சபையின் இசை இசைக்கருவிகள் பயன்படுத்தப்படாத பாடல்களாகத்தான் இருந்தது என்ற உண்மையை ஏக மனதாக வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி எந்த சந்தேகமும் இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதாவது,

கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் நாம் எதைப் பார்க்கிறோமோ அதைப் பற்றி எந்த சந்தேகமும் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஜஸ்டின் மார்ட்டின் இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிறந்த இவர் சொல்லும் போது "வெறுமனே பாடல்களை பாடுவது குழந்தைகளுக்கு ஏற்றதல்ல ஆனால், குழந்தைகளும், மற்றவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உயிரற்ற இசைக் கருவிகளை பயன்படுத்தி பாடப்படும் பாடல்கள் சபையிலிருந்து நீக்கப் படுகிறது, வெறுமனே பாடுவது மாத்திரம் விடப்பட்டிருக்கிறது அல்லது இருக்கிறது" என்று சொன்னார். பிரிவினை செய்யப்பட்ட வீடு பக்கம் எண் 184.

"போப்" விட்டாலியன் மேற்கு ஐரோப்பாவிலுள்ள சில சபைகளில் சுமார் 670 கி.பி.யில் முதல் முதலாக "ஆர்கன்" என்ற இசைக்கருவியை அறிமுகப்படுத்தினார். (அமெரிக்க கலைக்களஞ்சியம் பாகம் 12, பக்கம் எண் 688). ஆயினும் ஜனங்கள் கடுமையாக ஆட்சேபணை தெரிவித்ததால் சில காலத்திற்கு அந்த ஆர்கன்களை நீக்க வேண்டியிருந்தது.

நாங்கள் இன்னும் கூடுதலான அறிக்கைகளை கீழே வைத்துள்ளோம். இந்த அறிக்கைகள் ஆச்சரிய மூட்டுகின்றன. அந்த அறிக்கைகள் இன்றைய நாட்களில் நாம் மத உலகில் காண்கின்ற மார்க்க பிரிவினை கூட்டத்தை ஸ்தாபித்தவர்களாலும் இந்த மார்க்க பிரிவினை கூட்டத்தைச் சேர்ந்த வல்லுநர்களாலும் செய்யப்பட்டவைகள்.

இந்த மனிதர்கள் ஞானப்பாட்டுகளைப்பாடும்போது இசைக் கருவிகளைச் சேர்ப்பது பாவமானது என்று உறுதியாக நம்புவது நமக்குத் தெளிவாகிறது. ஆயினும் அவர்கள் எந்த மார்க்க பிரிவினை கூட்டத்தில் இருந்தார்களோ அவைகள் இன்றைய நாட்களில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துகின்றன. இந்த அறிக்கைகள் "கிறிஸ்துவின் சபையின் உறுப்பினராக நான் ஏன் இருக்கிறேன்" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப் பட்டிருக்கின்றன.

ப்ரெஸ்பிட்டேரியன் சபையின் ஸ்தாபகரும் குறிப்பிடத்தக்க தலைவர்களுள் ஒருவராகிய "ஜான்கல்வின்" சொல்லும் போது, "தூபம் காட்டுவதை விடவும், விளக்குகளை ஏற்றுவதை விடவும் பிரமாணத்தின் மற்ற நிழல்களை திரும்ப கொண்டு வருவதைக் காட்டிலும் தேவனை துதிக்க இசைக்கருவிகள் ஒருபோதும் ஏற்றதாயிருக்காது", என்று சொல்கிறார்.

மெதடிஸ்ட்களுக்குள் எல்லா காலத்திலும் புகழ் பெற்ற மிகச் சிறந்த வர்ணனையாளரான "ஆடம் கிளார்க்" சொல்லும் போது இசையை ஒரு விஞ்ஞானமாக அதை நான் மதிக்கிறேன், ஆச்சரியப்படுகிறேன், ஆனால், தேவனுடைய வீட்டில் இசைக்கருவிகள் பயன்படுத்துவதை நான் அருவருக்கிறேன். இது இசையை துஷ்பிரயோகம் செய்வதாகும்.

மெதடிஸ்ட் சபையின் புகழ்பெற்ற ஸ்தபாகரான "ஜான் வெஸ்லி" சொல்லும் போது நம்முடைய தொழுகை ஸ்தலங்களுள் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுவதை குறித்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை ஏனென்றால் அவைகள் கேட்கப்படுவதுமில்லை காணப்படுவதுமில்லை என்று சொன்னார்.

சார்லஸ் ஸபர்ஜன் ஒரு சிறந்த பேப்டிஸ்ட் பிரசங்கியாராக திகழ்ந்தார் அவர் மெட்ரோபாலிடன் பேப்டிஸ்ட் கூடாரத்தில் (அது லண்டனில் இருந்தது) இருபது வருடங்களாக ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு பிரசங்கித்தார் ஆனால் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்த வில்லை.

புகழ்பெற்ற சீர்திருத்தவாதியாகிய மார்ட்டின் லூதர் சொல்லும் போது ஆர்கன் என்ற இசைகருவியை பாகாலின் அடையாளமாக அழைத்தார். நிச்சயமாகவே பாகால் யூதர்கள் கடந்த காலத்தின் சில வேளைகளில் ஆராதித்த கள்ள தேவர்களாகும். எனவே மனிதனால் உண்டாக்கப்பட்ட மார்க்க பிரிவினை கூட்டத்தின் சில ஸ்தாபகர்களுக்கு வல்லுநர்களும் புதிய ஏற்பாட்டிலிருந்து நாம் படித்த காரியங்களை உணர்ந்து கொண்டார்கள். பாடல்களைப்பாடுவதற்கு மாத்திரமே கிறிஸ்து அதிகாரம் கொடுத்திருக் கிறார். எனவே, ஞானப்பாட்டுகளை நாம் பாடும்போது இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது பாவமானதாகும். நாம் மேலே பார்த்த மனிதர்களுள் ஒருவர் இசைக்கருவிகளின் பயன்பாட்டைத்தான் வெறுப்பதாகவும் அது தனக்கு அருவருப்பு என்றும் சொன்னார்.

இங்கே இன்னும் அநேக முக்கியமான கேள்விகள் இருக்கின்றன. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து சொல்கின்ற காரியங்களை இன்றைய நாட்களில் மார்க்க பிரிவினை சபை உறுப்பினர்கள் உணர்ந்து கொண்டு ஏற்றுக் கொள்ளக் கூடாதா? வீணான ஆராதனை செய்யும் பாவத்திலிருந்து வெளியேற ஞானப்பாட்டுகளைப் பாடும்போது இசைக்கருவிகளின் பயன்பாட்டை அவர்கள் நிறுத்திவிடக்கூடாதா?

தேவன் ஒரு காரியத்தை குறிப்பிட்டு சொல்லும்போது அவர் குறிப்பிடாத எல்லா காரியங்களும் பாவமானதாகும். எனவே நாம் கொலோசெயர் 3:17ல் நாம் படித்தபடி நாம் எதைச் செய்தாலும் கிறிஸ்து விடமிருந்து நமக்கு அதிகாரம் வேண்டும்.

கர்த்தருக்கு சித்தமானால் பழைய ஏற்பாட்டிலிருந்து இன்னும் அநேக உதாரணங்களை நாம் அடுத்த மாதம் பார்ப்போம். அதுவரை நாம் நினைக்கின்ற, சொல்கின்ற, செய்கின்ற எல்லா காரியங்களும் இயேசுவின் புதிய ஏற்பாட்டில் இயேசுவால் அங்கிகரிக்கப்பட்டிருக்கிறதா என்பதை நிச்சயித்துக் கொள்ள பாடுபடுவோம்.

*CHARLE* *BENNY*

# சபைக்கு முன்மாதிரி ஒன்று உள்ளதா?

மாதிரி என்ற கருத்தை சிலர் ஏளனம் செய்கின்றனர். தையல் தைப்பவர்கள், புதிய உடை தயாரிப்பதில் தங்களுக்கு மாதிரி உதவியாய் இருப்பதைப் பார்க்கிறார்கள். பள்ளியில் படிக்கும் மாணவன் எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொள்ளும் போது ஆசிரியர் அவனுக்குக் கொடுத்த மாதிரியைப் பார்த்து எழுதுகிறான். சபைக்கும் ஒரு மாதிரியை தேவனால் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**பழைய ஏற்பாட்டில் தேவனால் தரப்பட்ட மாதிரிகள்**

ஆபேலின் காலத்திலேயே தேவன் ஆராதனையின் மாதிரியைக் கொடுத்திருந்தார். விசுவாசத்தினாலே ஆபேல் தனது பலியை செலுத்தினபடியினாலும் (எ.பி. 11:4) விசுவாசம் கேள்வியினாலே வருவதாலும் (ரோ 10:17) தேவன் தாவர பலியையல்ல மிருக பலியையே குறிப்பிட்டார் என்பது தெளிவாகிறது. (ஆதி. 4:4) இவ்வாறாக மிருகம் மற்றம் இரத்தத்தைக் காணிக்கை தரும் மாதிரி ஆரம்பித்தது. இம்மாதிரி நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரால் தொடரப்பட்டது. ஆதி 8:20; 12:7,8; 26:23-25; 31:54 இஸ்ரவேலரோடு ஏற்பட்ட மோசேயின் உடன்படிக்கையில் இரத்த பலி அடிப்படையானதாய் இருந்தது. (லேவி 16:1-34) இந்த அமைப்பானது இயேசுவுக்கு ஒரு சரீரம் ஆயத்தம் பண்ணப்பட்ட போது வந்து சேர்ந்தது. ஏனெனில் அவருடைய சொந்த இரத்தத்தினாலே, அவர் உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானார் (யோ 1:29; எபி. 9:12, 10:5).

நோவா பேழையைக் கட்டுவதற்கு குறிப்பான கட்டளைகளைக் கொடுத்தார். மரத்தின் வகை, அளவுகள், தளங்களின் எண்ணிக்கை, ஜன்னல் இன்னும் பல விஷயங்கள் யாவற்றையும் கொடுத்தார்.

நோவா மாதிரியைப் பின்பற்றியதால் பாராட்டப்பட்டார். (ஆதி 6:14-16, 22) மோசே உடன்படிக்கைக் கூடாரத்தை கட்டுகையில் மலையில் தேவனால் கொடுக்கப்பட்ட (எபிரேய மொழியில் கிரேக்க மொழியில்) மாதிரி இல்லாமல் அப்பணியை செய்யவில்லை (யாத். 25:9 40-26:30) (எபி 8:5) அதேபோல் கர்த்தர், ஆலயத்தின் மாதிரியை ஆவியினால் தாவீதுக்கு கட்டளையிட்டார். (1 நாளா 28:12) தாவீது இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றார். (1நாளா 28:19) ஆலயத்தைக் கட்டுவதற்கு தாவீது அனுமதிக்கப்படவில்லை. ஆனால், அவர், என்னாலே இயன்றமட்டும், அதற்கென்று சவதரித்தேன் என்று கூறினார் (1நாளா 29:12) தமது மகன் சாலமோனிடம் மாதிரியை ஒப்படைக்கு முன், அவர் தரப்பட்ட அளவின்படியே ஆலயத்தைக் கட்டுவதற்கு கற்களைச் சேர்த்திருந்தார் (1நாளா 38:11 1 இராஜா 6:7) மாதிரியைப் பின்பற்றுவதில் சாலமோன் ஜாக்கிரதை எவ்வளவாயிருந்ததென்றால் அது கட்டப்படுகிறது போது. சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இரும்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை (1இராஜா 6:7).

**புதிய ஏற்பாட்டில் தேவனால் தரப்பட்டமாதிரி**

தமது ஜனங்கள் பின்பற்றி நடப்பதற்கென்று தேவன் ஒரு மாதிரியை எப்பொழுதும் தந்துள்ளார். சாலமோனின் தேவாலயத்திற்கு அவர் (தேவன்) கட்டிக் கலைஞராயிருந்ததுப் போலவே சாலமோனிலும் பெரியவர் (மத்.

12:42) ஒருவரால் கட்டப்பட்ட வேறொரு தேவாலயத்திற்கும் தேவனே கட்டிடக் கலைஞராயிருக்கிறார். இயேசு, தாம் பொருள்களால் ஆன அமைப்பையோ அல்லது சபை கூடிவரும் கட்டிடத்தையோ கட்டப் போவதில்லை என்று அறிவித்தார். (பொது ஆராதனைக் கென்று கட்டப்பட்ட மாளிகை) ஆனால் மக்களால் ஆன ஒரு கட்டிடத்தை நீங்களே தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள். (1கொரி 3:9) என்று எழுதப்பட்டுள்ளதை கட்டப் போவதாக அறிவித்தார். இதன் விளைவாக இயேசுவின் தேவாலயம் விலையேறப்பட்ட கற்களாகிய சலவைக்கல் (அ) கேதுரு மரங்கள் (1இராஜா 5:17 - 6:10) ஆகியவைகளால் கட்டப்படாமல், ஜீவனுள்ள கற்கள் கொண்டு கட்டப்பட்டது. (1பேது 2:5) பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பு தான் அவர்களை இணைக்கும் கலவையாக உள்ளது. (கொலோ 3:14).

எல்லா கிறிஸ்தவர்களும் ஒன்றாயிணைந்து தேவன் நான் அவர்களுக் குள்ளே வாசம் பண்ணி அவர்களுக்குள்ளே உலாவுவேன் என்று சொன்ன படியினால் நாங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம். (2 கொரி 6:16, எபே. 2:20-22) என்று சொல்லக்கூடிய சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம். பவுல் கிறிஸ்தவர்களுக்கு தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம் என்று எழுதினார் (1கொரி 3:17) ஆச்சரியப்படத்தக்க வகையில் கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து மட்டும் கர்த்தருடைய ஆலயமாயிருப்பதில்லை. ஒவ்வொரு வரும் தனித்தனியே அப்படிதான் இருக்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்த வருடைய சரீரமும் பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது. (1 கொரி 6:19) இந்த ஆச்சரியமான கட்டிடத்திற்கு மாதிரி ஒன்றுள்ளதா? ஆபேலின் பலி நோவாவின் பேழை, மோசேயின் உடன்படிக்கைக் கூடாரம் மற்றும் சாலோமோனின் தேவாலயம் ஆகியவற்றிற்குப் பரலோகத்திலிருந்து குறிப்பு ரைகள் வந்தது போலவே சபை என்று அழைக்கப்படுகிற தேவ னுடைய ஆவிக்குரிய இந்த ஆலயத்திற்கும் வந்தது இந்தக் குறிப்புரைகள் பரலோகத் திலிருந்து கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கு அனுப்பப்பட்டது. கிறிஸ்த வத்தின் தொடக்கம் பற்றி முன்னுரைக்கையில் (கி.பி. 30 அப். 2:1-47, 11:15) சபைக்கான பிதாவின் மாதிரியை இயேசு பன்னிருவருக்கும் அறிவித்தார். பூலோகத்திலே நீங்கள் எவைகளை கட்டுவீர்களோ அவைகள் பரலோகத் திலும் கட்டப்பட்டிருக்கும். (கிரேக்கம் Extaidedemena) பூலோகத்திலே நீங்கள் எவைகளை கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும். (கிரேக்கம் Ester Lelumend) (மத். 18,18).

அப்போஸ்தலர்கள் எதையும் கூறுவதற்கு அல்லது எழுதுவதற்கு முன்னதாகவே அவர்கள் கூறப்போகிற அல்லது எழுதப்போகிறவைகள், அப்போஸ்தலர்களுக்கு எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளில் அனுப்பப் படவிருந்த பரிசுத்த ஆவியானவரிடத்தில் பிதாவினால் கூறப்பட்டன (யோவா 14:26) (அப். 1:8 2:1 - 4) ஆவியானவர் சுயமாய் ஒன்றும் பேசுவதில்லை ஆனால், பிதாவனவர் தம்மிடத்தில் கூறக்கேட்டவைகளை சகல சத்தியத்திற்குள்ளும் அப்போஸ்தலர்களை வழிநடத்துவதற்காக அவர் அறிவிப்பார் (யோவா 16:13) இன்றைய நாட்களில், தேவன் நமக்கு ஒரு மாதிரியை கொடுத்துள்ளார். ஒரு ஆசிரியரின் வழிநடத்துதலை பொருட் படுத்தாமல், பொருளற்ற விதத்தில் கூறிக் கொண்டிருக்கும் பிள்ளையை போல் நாம் இருக்க வேண்டாம். மாறாக, தேவன் விரும்புகின்ற மாதிரியை பின்பற்றுகிறவர்களாய் நாம் இருக்கக்கடவோம். ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்பதை அவர் விருப்பமாய் உள்ளது (2 பேதுரு 3:9).

# அந்நிய பாஷைகளைக் கற்றுக்கொள்வோம்

கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இயேசு கிறிஸ்து மனிதனுடைய நித்திய ஜீவனுக்காக தம்முடைய சுய ரத்தத்தை கொடுத்து சம்பாதித்த சபை (அப். 20:28) இன்று அநேக பிரிவுகளாக பிரிந்து (சுமார் 1000க்கும் மேல்) சுய இஷ்டமான உபதேசங்களோடு இன்றைக்கு பெருகி வருகின்றன.

மனிதன் தன்னுடைய பெயரில் ஸ்தாபித்த சபைகளுக்கும், உபதேசங்களுக்கும்தான் இன்றைக்கு மக்களிடத்திலே வரவேற்பு இருக்கிறதே தவிர உண்மையான சபைக்கும் சத்தியத்திற்கும் தங்கள் செவியை சாய்ப்பது கடினமாகதான் இருக்கிறது. இதைக் குறித்து நமது ஆண்டவராகிய கிறிஸ்து சொல்லும்போது "நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை, வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்" (யோவா 5:43) என்று கடிந்து கொள்கிறார்.

இன்றைய நாட்களில் கிறிஸ்தவத்தை பார்க்கும்போது நித்திய ஜீவனுக்குரிய மார்க்கமாக தெரியாமல் வயிற்று பிழைப்பை நடத்தும் கூட்டமாகவே மாறி இருக்கிறது. கிறிஸ்தவத்தை வைத்து தங்களுக்கு இஷ்டமான போதனைகளையும், காலாவதியான போதனைகளையும் பேசி நியாயப்பிரமாணத்தின் போதகர்களாக இருக்க வேண்டும் என்று தான் அநேகர் விரும்புகிறார்கள்.

நம்முடைய பரிசுத்த வேதாகமம் பரிசுத்த ஆவியானவராலே பரிசுத்த மனுஷர்களை கொண்டு நமக்கு எழுதி கொடுக்கப்பட்டு இருக்கிறது (2 தீமோ 3:16,17, 2பேது 1:20,21) என்பதை நாம் நன்கு அறிவோம். மேலும் இந்த வேத வசனங்களோடு ஒரு வார்த்தையும் கூட்டவும், குறைக்கவும் (உபா 4:2, 12:32, நீதி 30:6, வெளி. 22:18,19) கூடாது என்று பரிசுத்த ஆவியானவர் எச்சரிக்கிறார். மேலும் ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் (1பேது 4:11) என்று அறிவுறுத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் எழுதி கொடுத்த இந்த வேத வசனங்களோடு நம்முடைய வார்த்தைகளை (உபதேசங்களை) கூட்டும் போதும் குறைக்கும் போதும் நாம் பிசாசாக இருக்கிறோம் (யோவா 8:44) என்று வேத வசனம் எச்சரிக்கிறது.

ஆனால், இவ்வசனங்களையும் பரிசுத்த ஆவியானவரையும் கொஞ்சம் கூட சட்டை பண்ணாமல் அநேக ஊழியக்காரர்கள் வேதாகமத்தை எடுத்துக் கொண்டு தங்கள் மனம் போன போக்கிலே பேசி கொண்டும் சுய இஷ்டமான உபதேசங்களை போதித்தும் அநேக மக்களை தங்களுடைய அடிமையாகவே வைத்து இருக்கிறார்கள். இன்னும் சிலர் காலாவதியான

ஏதாவது ஒரு உபதேசத்தை பிடித்துக் கொண்டுமக்களையும் அந்த உபதேசத் திற்கு மயக்கி அவர்களுடைய மரணம் வரைக்கும் அந்த உபதேசத்திற்கு அடிமையாக வைத்து இருக்கிறார்கள்.

இன்றைக்கு மக்களை அப்படி அடிமைப்படுத்தி வைத்திருக்கும் உபதேசம் தான் "அந்நிய பாஷை" என்கிற உபதேசமாகும். இந்த உபதேசத்திற்கு இன்றைக்கு அநேகர் தங்களை ஒப்புக் கொடுத்து செம்மறியாடுகளை போல கூட்டம் கூட்டமாக பின்னாலே போய் அடிமைப்பட்டு கிடக்கிறார்கள். அநேக பிரிவினை கூட்டங்களில் பரிசுத்த ஆவியானவரை மட்டும் பிடித்துக் கொண்டு பிதாவையும், கிறிஸ்துவையும் ஓரத்தில் தள்ளக்கூடிய கூட்டங்கள் தான் அநேகமாக இருக்கிறது. உங்களுக்கு ஆவியின் அபிஷேகம் நிறைவாக வேண்டும் என்றுதான் பிரசங்கமே செய்கிறார்கள். ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக் கொண்டால் தான் "அந்நிய பாஷையை" பேச முடியும் என்று சத்தியம் பண்ணாத குறையாக அடித்து சொல்கிறார்கள்.

இன்றைய கிறிஸ்தவத்தில் அநேக கள்ள போதனைகள் இருந்தாலும் கிறிஸ்தவத்தை பாடாய் படுத்தும் உபதேசம் எதுவென்றால் அது "அந்நிய பாஷைகள்" என்கிற வரம் தான், இதைக் குறித்து சரியாக புரிந்து கொள்ளாமல் கள்ள போதகர்களின் வார்த்தைகளை நம்பி அநேகர் ஆவியின் அபிஷேகம் பெற வேண்டும் என்பதற்காக உபவாசம் இருந்தும் தூக்கத்தை மறந்து இரவும், பகலும் கண்ணீரோடு ஜெபித்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

பின்பு அவர்கள், அவர்களுடைய பிரிவினை கூட்டங்களில் பேசப்படும் (அந்நியை பாஷை என்கிறார்கள்) வார்த்தைகளை கவனித்து, கவனித்து நாளடைவில் அவர்களும் பேசிப்பழகி ஆவியின் அபிஷேகம் கிடைத்து விட்டதாக திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள். இன்றைக்கு அந்நிய பாஷை என்று எதைக் கூறுகிறார்கள் பாருங்கள். "கலலபலலபாய்... கலலபலலபாய்... கலலபலலபா என்றும் தீனக்கரலபா.. சங்கரபலலபா என்றும் கிக்ரீ கிக்ரீ கிக்ரீ... கிக்ரீகிக்ரீ என்றும் ஷெரிக்கபபபபா... ஷெரிக்கபபபபா... என்றும் தாபா கூபா... தீபா... காபா.. தாபாதா... பாதாபா" என்று பேசுகிறார் கள். இது எந்த பாஷை என்றும் இதற்கு என்ன அர்த்தம் என்றும் நமக்கும் தெரியாது, அவர்களுக்கும் தெரியாது, இதற்கு என்ன அர்த்தம் என்று கேட்டால் தேவனுக்கு மாத்திரமே புரியும் என்றும் பரலோக பாஷை என்றும் மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாது என்று சொல்லி, லாவகமாக தப்பித்துக் கொள்கிறார்கள். மேலும் அவர்களிடத்தில் இதைக் குறித்து கேட்டால் பரிசுத்த ஆவியானவரையே தூஷிக்கிறாய் என்று சொல்லி மிரட்டுகிறார்கள்.

பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு "உலகத்தில் எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது அவைகளில் ஒன்றும் அர்த்த மில்லாததல்ல (1கொரி 14:10) என்று கூறுகிறார். மேலே கூறப்பட்ட வார்த்தைகளுக்கு (பாஷைகள்) ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்று

சிந்தித்து பாருங்கள். பரிசுத்த ஆவியானவர் யோவான் ஆசிரியரைக் கொண்டு பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் (1யோவா 4:1) என்று சொல்லி, சோதித்துப் பார்க்க கூடிய அதிகாரத்தையும் நமக்கு இந்த வேத வசனத்தில் கொடுத்து இருக்கிறார். ஆகையால் நாம் வேத வசனங்களைக் கொண்டு "அந்நிய பாஷையை" ஆராய்ந்து பார்த்துக் கற்றுக் கொள்வோம்.

**அந்நிய பாஷைகள் என்பது என்ன?**

"அந்நிய பாஷைகள்" என்பதற்கு வேதாகமத்தில் "நவமான பாஷைகள்" (மாற் 16:17) என்றும் "வெவ்வேறு பாஷைகள்" (அப். 2:4) என்றும் "ஜென்ம பாஷைகள்" (அப். 2:3) என்றும் "பல பாஷைகள்" (அப். 10:45) என்றும் "அந்நிய பாஷைகள் " (அப். 19:6) என்றும் "பற்பல பாஷைகள்" என்றும் "பலவித பாஷைகள்" (1கொரி 12:28) என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. மேலே உள்ள வசனங்களை ஆழ்ந்து நோக்கும் போது "பாஷை" என்று ஒருமை வார்த்தை பயன்படுத்தபடாமல் "பாஷைகள்" என்ற பன்மை வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது எனவே "அந்நிய பாஷைகள்" என்பது தனிப்பட்ட "ஒரே பாஷையல்ல" என்று நமக்கு இதன் மூலம் விளங்கும் ஆகையால் நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் "அந்நிய பாஷைகள்" என்று சொல்வதை விட "அந்நிய மொழிகள்" "பல மொழிகள்" "பலவித மொழிகள்" "பற்பல மொழிகள்" என்று தான் சொல்ல வேண்டும். இதை நாம் கவனிக்கும் போது "அந்நிய பாஷைகள்" என்பது பரலோக மொழியல்ல என்றும் அது உலகத்தில் பலதரப்பட்ட மனிதர்கள் பேசும் "பல மொழிகள்" என்பது விளங்கும். இதைக் குறித்து சற்று விரிவாக பார்ப்போம்.

**பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்கள்**

நாம் அந்நிய பாஷைகளை (அந்நிய மொழிகள்) குறித்து கற்றுக் கொள்வதற்கு முன்பாக சில அடிப்படை சத்தியங்களை கற்றுக் கொண்டால் தான் பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் (அந்நிய பாஷை உட்பட ஒன்பது வரங்கள்) எதற்காக கொடுக்கப்பட்டது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

யோவான் ஸ்நானகன் தன் ஊழியத்தை நிறைவேற்றி முடித்த போது இயேசு கிறிஸ்து தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்தார். அப்படி ஆரம்பிக்கும்போது தம்முடைய சீடர்களாக (அப்போஸ்தலர்கள்) 12 பேரை தமக்கு சாட்சியாக ஏற்படுத்தினார் அவர்கள் அனைவருமே (ஒரு சிலரை தவிர) படிப்பறிவு என்பது சுத்தமாக இல்லாதவர்கள் மீன் பிடிக்கும் தொழிலை உடையவர்களாக இருந்தார்கள் இவர்களை குறித்து வசனம் அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும் (அப். 4:13) கூறுகிறது.

எனவே, படிப்பறிவு என்பது கொஞ்சம் கூட அவர்களுக்கு கிடையாது அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் கடல், மீன், வலை, இதற்குள்ளாகவே அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இயேசு கிறிஸ்து அவர்களை அழைத்த போது எல்லாவற்றையும் விட்டு கிறிஸ்துவுக்கு பின் சென்றார்கள் (லூக். 5:11) நம்முடைய இரட்சகர் அவர்களை தன்னோடு கூட சுமார் 31/2 வருடம்

வைத்து தம்முடைய ஊழியத்திலே அநேக காரியங்களையும், உபதேசங்களையும் கற்றுக் கொடுத்தார்.

இயேசு கிறிஸ்து சிலுவையின் மரணம் தன்னை நெருங்கிவரும் வேளையை அறிந்து அப்போஸ்தலர்களை பார்த்து நான் என் பிதாவினிடத்திற்கு போகிறேன் (யோவான் 14:12) என்று சொன்னபோது அவர்கள் உள்ளங்கள் கலங்கி போனது அப்போதுதான் கிறிஸ்துவானவர் நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன் அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் (யோவா 14:16) என்று வாக்குத்தத்தம் செய்தார். இந்த வசனங்களையெல்லாம் நீங்கள் படித்து பார்த்தால் இயேசு கிறிஸ்துவிற்கு பிறகு அப்போஸ்தலர்களை பரிசுத்த ஆவியானவரே வழி நடத்துவார் என்று கூறுவதை நாம் காண முடியும்.

**பரிசுத்த ஆவியானவரைக் குறித்து அப்போஸ்தலர்களுக்கு இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தின காரியங்கள்**

1. பரிசுத்த ஆவியானவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார் (யோவா 14:26) (அப்போஸ்தலர்களும் சாட்சி)

**அவருடைய வேலை**

1. பாவத்தை குறித்தும் (யோவா 16:18)
2. நீதியைக் குறித்தும் (யோவா 16:18)
3. நியாயத் தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவா 16:8)
4. எல்லாவற்றையும் உங்களுக்கு போதிப்பார் (யோவா 15:26)
5. நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவா 15:26)

அதோடு மாத்திரம் அல்ல கிறிஸ்துவானவர் மேலும் சொல்கின்றபோது "சத்திய ஆவியாகிய அவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா 16:13) என்கிறார்.

கிறிஸ்து எப்படி சுயமாய் பேசவில்லையோ, கிரியை செய்யவில்லையோ (யோவா 5:30, 8:28, 7:17,18, 8:42, 11:51, 12:49, 14:10, 16:13) அதே போல் பரிசுத்த ஆவியானவரும் சுயமாய் பேசமாட்டார் (யோவா 16:13) பிதா குமாரனிடத்தில் என்ன உபதேசத்தை சொன்னாரோ அதையே குமாரனும் செய்தார், அதே போல் கிறிஸ்து என்ன உபதேசத்தை அப்போஸ்தலர்களுக்கு கொடுத்தாரோ அந்த உபதேசத்தைத்தான் அவரும் (பரிசுத்த ஆவியானவர்) நினைப்பூட்டுவாரே தவிர சொந்தமாக உபதேசங்கள் செய்யமாட்டார்.

கிறிஸ்து பல பாடுகள் பட்டு மரித்து உயிர்த்தெழுந்து பின்பு பரமேறுவதற்கு முன்பாக அப்போஸ்தலர்களை பார்த்து நீங்கள் எருசலேமை விட்டு போகமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். மேலும் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா

முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சி களாயிருப்பீர்கள் (அப். 1:8) என்றார். மேலும் கிறிஸ்துவானவர் ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் (மத். 28:19) என்று கட்டளையிட்டு இருக்கிறார்.

மேலே சொல்லப்பட்ட வசனத்தை கொஞ்சம் உற்று கவனியுங்கள். பூமியின் கடைசி பரியந்தமும் சென்று சகல ஜாதிகளையும் (தேசத்தார் களையும்) சீஷராக்குங்கள் என்று கட்டளையிட்டிருக்கிறார் அப்போஸ் தலர்கள் என்றழைக்கப்பட்ட பனிரெண்டு பேரும் (ஒருசிலர் தவிர) படிப்பறிவு என்பது சுத்தமாக இல்லாதவர்கள் அப்படியிருக்க உலகமெங்கும் எப்படி சத்தியத்தை கொண்டு செல்ல முடியும். உலகமெங்கும் ஒரே மொழி (பாஷை) பேசக்கூடியவர்கள் இருந்தால் தாரளமாக சுவிசேஷத்தைக் கொண்டு சொல்லலாம். ஆனால், உலகத்தில் எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது (1கொரி 14:10) என்று பரிசுத்த ஆவியானவர் விளம்பி இருக்கிறார்.

பிறகு எப்படி உலகமெங்கும் சத்தியத்தை கொண்டு செல்ல முடியும். ஒருவேளை அவர்கள் படித்து மொழிகளை கற்றுக் கொள்ள முடியுமா என்றால் அதற்கு வயதும் போதாது, நேரமும், காலமும் போதாது பிறகு எப்படி சுவிசேஷத்தை கொண்டு செல்ல முடியும். அதற்காகத்தான் பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய ஒன்பது வரங்களையும் அவர்களுக்குக் (அந்நிய பாஷைகள் உட்பட) கொடுத்தார். அதில் பலவித பாஷைகளை (அந்நிய பாஷைகள்) பேசும் வல்லமை உள்ளவர்கள் (வரத்தை பெற்றவர்கள்) எந்த தேசத்திற்கும் சென்று அவர்களுடைய மொழியிலே சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியும். ஆகையால் பரிசுத்த ஆவியானவர் இவ்வரங்களை முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர்களுக்கும், அப்போஸ்தலர்கள் மூலமாய் கிறிஸ்தவர்களுக்கும் கொடுத்தார்.


**ஆவிக்குரிய வரங்கள் (அந்நிய பாஷை உட்பட) எங்கே கொடுக்கப்பட்டது**

கிறிஸ்து பரமேறி போன பிற்பாடு சுமார் பத்து நாட்கள் கழித்து பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் 12 அப்போஸ்தலர்கள் (கவனிக்கவும் 120 பேர் அல்ல) ஒரு வீட்டில் கூடி வந்திருக்கும்போது (கிறிஸ்து கட்டளை யிட்டபடி (லூக். 24:47-49, அப். 1:4,5) பரிசுத்த ஆவியினாலே அவர்கள் நிரப்பப்பட்டார்கள் (அப். 2:1-3 வாசிக்கவும்).

பெந்தெகொஸ்தே பண்டிகை நாளாய் இருந்தபடியால் அந்த பண்டிகையை ஆசாரிக்கும்படி எருசலேமில் சுமார் 17 நாட்டைச் சேர்ந்த வெவ்வேறு பாஷைகளை (மொழி) பேசக் கூடியவர்கள் அங்கே கூடி வந்திருந்தார்கள் (அப். 2:9-11) அப்போது 12 அப்போஸ்தலர்களும் அவர்களுடைய பாஷையிலே (ஜென்ம பாஷை) தேவனுடைய மகத்துவங் களை பேசினார்கள் (அப். 2:8,11) இதைக் கேட்ட எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு ஒருவரையொருவர் பார்த்து இதோ பேசுகிற இவர்க ளெல்லாரும் கலிலேயரல்லவா? (அப்போஸ்தலர்கள் 12 பேரில் பெரும் பான்மையானவர்கள் கலிலேயா நாட்டை சேர்ந்தவர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள்) என்றார்கள் (அப். 2:7) மேலே சொல்லப்பட்ட வசனங் களை யெல்லாம் வாசித்து கவனித்துப் பாருங்கள்.

**(தொடரும்)**

**N. பர்னபாஸ், திருப்பூர்.**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008


# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 90 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**குறைந்தது எட்டாம் வகுப்பு படித்திருக்க வேண்டும்**

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு: எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

*திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.*




**தமிழன் TV சனி காலை 7.15 - 7.30**

**தமிழன் TV ஞாயிறு இரவு 9.45 - 10.00**

**SS மியூசிக் TV திங்கள் காலை 7.00 - 7.15**


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam. Ph : 04257 - 222555, 224555